வாராந்த சஞ்சிகை
டிசம்பர் 16 - 22, 2015

# சுடர் ஒளி

பக்கம் 24
விலை 30/-



# மாறாதா வடுக்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒடுங்கிய இடையை பெற 6 விலா எலும்புகளை அகற்றிய யுவதி

சுவீடனைச் சேர்ந்த யுவதியொருவர், கார்ட்டூன் பாத்திரங்களைப் போன்ற உடற்தோற்றத்தைப் பெறுவதற்காக சுமார் 3 கோடி இந்திய ரூபாவை சத்திர சிகிச்சைகளுக்கு செலவிட்டுள்ளதுடன், தனது 6 விலா எலும்புகளையும் அகற்றிக்கொண்டுள்ளார்.

25 வயதான பிக்ஸீ பொக்ஸ் எனும் இந்த யுவதி எலக்ரிஷியனாக தொழில்புரிந்தவர். ஆனால், தனது உடலை கார்ட்டூன் பாத்திரங்களைப் போன்று மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதே பிக்ஸீ பொக்ஸின் இலட்சியமாக இருந்தது.

ஏற்கெனவே அழகான தோற்றம் கொண்டவராகவே பிக்ஸீ பொக்ஸ் விளங்கினார்.எனினும், அவரின் மனதுக்கு அந்த அழகு போதுமானதாக இருக்கவில்லை. ஜெஸிக்கா ரெபிட், அரோரா, ஹோலி போன்ற கார்ட்டூன் பாத்திரங்கள் பிக்ஸீக்கு மிகப் பிடித்தமானவை.

அப்பாத்திரங்களைப் போன்று ஒடுங்கிய இடை, பெரிய மார்பகங்களுடன் தானும் தோன்ற வேண்டும் என அவர் விரும்பினார். இயற்கையாக இத்தகைய உடற்தோற்றம் அமைவது அரிது என்பதால் சத்திரசிகிச்சைகளை செய்துகொள்ள அவர் தீர்மானித்தார்.

இதற்காக ஆரம்பத்தில் சுமார் 1.6 கோடி இந்திய ரூபாவை அவர் செலவிட்டு சத்திரசிகிச்சைகளை செய்துகொண்டார்.அதன் பின்னரும் அவருக்கு திருப்தி ஏற்படவில்லை.அதனால் தனது விலாவின் கீழ்புறத்தில் 6 எலும்புகளை சத்திரசிகிச்சைகள் மூலம் அகற்றும் அதிரடி நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு அவர் துணிந்தார்.

இச்சத்திர சிகிச்சைகளுக்காக அவர் சுமார் 3.5 கோடி இந்திய ரூபாவை செலவிட்டுள்ளார். தற்போது மிக மெல்லிய இடையுடன் பார்பீ பொம்மை போன்ற தோற்றத்தில் பிக்ஸீ பொக்ஸ் காணப்படுகிறார்.

# பறவைகளை உண்ணும் சிலந்தி

தென் அமெரிக்காவின் சதுப்புநிலக் காடு களில் வசிக்கும் ஒரு வகை ராட்சத சிலந்திகள், மரங்களில் வசிக்கும் சிறு பறவைகளை அப்படியே கடித்து விழுங்கிவிடுகின்றன என்று, அமெரிக்க விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் வசிப்பவர் பியோடர் நாஸ்கிரக்கி. இவர் பல்வேறு காடுகளில் உள்ள விலங்குகளைப் பற்றி ஆய்வு மேற்கொண்டு வருகிறார். இவர் தென் அமெரிக்காவில் உள்ள மழைக் கால சதுப்புநில காடுகளில் ஆய்வு மேற்கொண்டார்.அப்போது ஒரு மரத்தின் அருகே நிலம் அதிருவதை உணர்ந்தார்.




உடனே அப்பகுதிக்கு ஓடிச்சென்று பார்த்தார். அங்கே நாய்க்குட்டி சைஸில் ஒரு ராட்சத சிலந்தி ஊர்ந்து வருவதைக் கண்டார்.அந்த விஷ சிலந்தியின் கால்கள் ஒவ்வொன்றும் சிறு குழந்தையின் முழங்கை அளவுக்கு இருந்தன. அந்த சிலந்தியின் நடமாட்டத்தை பியோடர் கண்காணித்தார். அந்த சிலந்தி, மரத்தின் மீதிருந்த ஒரு பறவையை தனது ராட்சத கால்களால் பிடித்து, தனது கால்கள் மூலம் அதன் கழுத்தை முறித்து அப்படியே உண்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இது குறித்து நாஸ்கிரக்கி கூறுகையில், மலை காடுகளில் இரவு நேரத்தில் அந்த சிலந்தியைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தேன். அதன் கால்கள் நடக்கும்போது குதிரையின் குளம்புகளை போல் பெரும் சத்தத்தை எழுப்பின. சிறு பறவை, தவளை, தேரை பல்லி மற்றும் பாம்புகளை பிடித்து தின்னும் அந்த சிலந்தி, காடு முழுவதும் நிறைந்து காணப்படுகின்றன. எங்களது குழுவினர் நேற்று முன்தினம் அந்த சிலந்தியை பிடித்து ஆய்வுக்கு கொண்டு வந்தனர்.தெராபோசா பிளான்டி எனும் அறிவியல் பெயர் கொண்ட அந்த சிலந்தியை தற்போது ஆய்வு செய்து வருகிறோம் என்றார்.



# கோழிகளுக்கு ஆடை

பிரித்தானியாவைச் சேர்ந்த யுவதி ஒருவர் கோழிகளுக்கு அணிவிக்கக்கூடிய விசேட ஆடைகளைத் தயாரித்துள்ளார்.

25 வயதான நிகோலா கொங்டன் (Nicola Condon) எனும் இந்தயுவதி கோழிகளைக் குளிரிலிருந்து பாதுகாப்பதற்காக இந்த ஆடைகளைத் தயாரித்துள்ளதாகக் கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகம் அழியுமாம்... நாஸ்டிரடாமஸ் கணிப்பு



உலக அளவில் பலரையும் கவர்ந்துள்ள 16 ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த தத்துவஞானி மைக்கேல் டி நாஸ்டிரடாமஸ் கணிப்புகள் இன்றளவும் குழப்ப மாகவும், சர்ச்சையாகவும் இருந் தாலும் கூட அவரது கணிப்பு களுக்கு இன்று வரை ஈர்ப்பும் இருக்கத்தான் செய்கிறது.

சாதாரண ஜோசியக்காரர் தான் அவர். ஜோதிடம் பயின்றவர். அமானுஷ்யம் அறிந்தவர். அதைப் பயன்படுத்தி தனது கணிப்புகளை அவர் செய்துள்ளார். அதில் பல பலித்துள்ளன என்பதுதான் நாஸ்டிரடாமஸின் கணிப்புகளுக்கு இன்றளவும் உலக மக்களிடையே ஆர்வம் அதிகமாக இருக்க முக்கியக் காரணம்.

1555 ஆம் ஆண்டு இவரது கணிப்புகள் அனைத்தும் பிரெஞ்சு மொழியில் தொகுத்து வெளியிடப்பட்டன. உலகம் முழுவதும் பெரும் பரபரப்பையும் படபடப்பையும் இவை ஏற்படுத்தின. இந்த வகையில் 2016ஆம் ஆண்டு குறித்த இவ ரது கணிப்புகள்தான் இப்போது உலகம் முழுவதும் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறன.

### வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கணிப்புகள்

நாஸ்டிராடமஸின் பல கணிப்புகள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. காரணம், பல முக்கிய வரலாற்றுச் சம்பவங்களுடன் தொடர்புடையவை. கென்னடி சகோதரர்களின் படுகொலை, ஹிட்லரின் எழுச்சி, நெப்போலியனின் வீழ்ச்சி, 9/11 தாக்குதல் என பல உண்மைச் சம்பவங்களை முன் கூட்டியே கணித்தவர் அவர்.

ஈடு இணை இல்லை நாஸ்டிரடாமஸுக்குப் பிறகு அப்படிப்பட்ட எந்த தத்துவ ஞானியையும் உலகம் கண்டதில்லை. அதே பிரான்சில் மேலும் பலரும் கூட கணிப்புகளைக் கூறி வந்த போதிலும் கூட நாஸ்டிரடாமஸுக்கு ஈடு இணையான ஒருவர் உலகளவில் எங்குமே இல்லை.

2016க்கான பரபரப்பு கணிப்புகள் தற்போது 2015 முடிவடைந்து 2016ஆம் ஆண்டு பிறக்கவுள்ளது. இந்த வருடப் பிறப்பு எப்படி இருக்கும், புது வருடம் எப்படி அமையும் என்பது குறித்து எதிர்பார்ப்பு மக்களிடையே அதிகமாகவே உள்ளது. இந்த நிலையில் நாஸ்டிரடாமஸ் 2016ஆம் ஆண்டுக்கான கணித்துள்ள சிலவற்றை இங்கு பார்க்கலாம்.

### ஒபாமாவே கடைசி... அமெரிக்கா காலி?

நாஸ்டிரடாமஸின் 2016ஆம் ஆண்டுக்கான கணிப்புகளில் மிகவும் பரபரப்பாகப் பேசப்படு வது அதிபர் ஒபாமாவைப் பற்றி அவர் கூறியுள்ளது. அவர்தான் அமெரிக்காவின் கடைசி அதிபராக இருப்பார் என்று நாஸ்டிரடாமஸ் கூறியுள்ளார். 2013இல் ஒபாமா மீண்டும் வெல்வார் என்றும் நாஸ்டிரடாமஸ் கூறியிருந்தார் என்பது நினைவிருக்கலாம். அப்படியானால் ஒபாமா ஆட்சியோடு அமெரிக்கா அழியப் போகிறதா அல்லது அமெரிக்காவில் அதிபர் ஆட்சி முறை மறைந்து விடுமா அல்லது சீனா, ரஷ்யா போன்ற புதிய வல்லரசு நாடுகள் எழுச்சி பெறுமா என்பது குறித்துத் தெரியவில்லை.

### அதி பயங்கர வானிலை மாற்றங்கள்

2016ஆம் ஆண்டு அதி பயங்கரமான வானிலை மாற்றங்களை உலகம் சந்திக்கும் என்று நாஸ்டிரடாமஸ் கூறியுள்ளார். அதாவது இயற்கைப் பேரிடர்கள், பேரழிவுகள், கடல் கொந்தளிப்புகள் அதிக அளவில் இருக்குமாம். பூமியே கடலுக்குள் போய் விட்டதைப் போன்ற அள வுக்கு வெள்ளப் பெருக்கு அதிக மாக இருக்குமாம். ஏற்கனவே தமிழகத்தை பெருவெள்ளம் அலைக்கழித்ததைப் பார்க்கும் போதும், ‘எல் நினோ எபக்ட்’ என்று கூறப்படுவதைப் பார்க்கும்போதும் இந்தக் கணிப்பு பலிக்கலாமோ என்ற அச்சமும் ஏற்படுகிறது.

### கோள்கள் இடம்மாறும்

2016ஆம் ஆண்டு கோள்கள் வழக்கத்துக்கு விரோதமான முறையில் இடம் மாறுமாம். இந்த கோள்கள் மாற்றத்தால் பூமியில் பல அதி பயங்கர நிகழ்வுகள் ஏற்படலாமாம். அது என்ன மாதிரியான நிகழ்வுகள் என்பதை நாஸ்டிரடாமஸ் சொல்லவில்லை.

மத்திய கிழக்குப் பற்றி எரியும் 2016ஆம் ஆண்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெரும் பேரழிவு ஆண்டாக அமையுமாம். அங்குள்ள பெற்றோலியக் கிணறுகள் பல பற்றி எரியுமாம். பெரும் சேதத்தை இவை சந்திக்குமாம்.

குண்டுவெடிப்புகள் அதிகரிக்கும் மத்திய கிழக்கு நாடுகள் குறித்த இன்னொரு கணிப்பில் அங்கு அதிக அளவில் குண்டுவெடிப்புகள் நடைபெறும் என்று நாஸ்டிரடாமஸ் கூறியுள்ளார். கடந்த 4 வருடமாகவே மத்திய கிழக்கு அமைதியிழந்து போர்க்களமாக காணப்படுவது நினைவிருக்கலாம்

### விமானங்கள் காணாமல் போகும்

இன்னொரு பரபரப்புக் கணிப்பு என்னவென்றால் விமானங்கள் அதிக அளவில் காணாமல் போகுமாம். ஏற்கனவே ‘மலேசியன் ஏயார்லைன்ஸ்’ விமானம் ஒன்று கடந்த வருடம் காணாமல் போனது. இன்னொரு விமானம் உக்ரைனில் சுட்டு வீழ்த்தப்பட்டது. எனவே 2016இல் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என அச்சம் எழுந்துள்ளது.

### உலகத்தை அழிக்கத் திட்டமிடும் அமெரிக்கா

அமெரிக்கா உலகத்தையே அழிக்கும் திட்டத்துடன் செயல்படும் என்பது நாஸ்டிரடாமஸின் இன்னொரு கணிப்பாகும். வெள்ளை மாளிகை இதற்கான திட்டமிடல்களில் ஈடுபடும் என்றும் நாஸ்டிரடாமஸ் கூறியுள்ளார். மத்திய கிழக்கிலிருந்து இந்த போர் விளையாட்டை ஆரம்பிக்கும் அமெரிக்கா என்பதுதான் இதில் முக்கியமான அம்சம். கிட்டத்தட்ட மத்திய கிழக்கு பற்றி எரிந்து வருவதை நாம் கண் கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஈராக், ஆப்கானிஸ்தானில் அமைதி போய் விட்டது - அங்கு அமெரிக்கா நுழைந்து முதல் என்பதும் குறிப்பிடத்தக்கது.

துருவப் பகுதிகள் உருகுவதும் 2016இல் நடக்கும் என நாஸ்டிரடாமஸ் கணித்துள்ள இன்னொரு முக்கிய அம்சம். அதாவது துருவப் பகுதிகள் மூழ்கும் என்பது உலக அளவில் வெப்பமயமாதல் அதிகரித்து வருவதாக ஏற்கனவே விஞ்ஞானிகள் கூறி வருகின்றனர். இது மேலும் அதிகரித்து துருவப் பகுதிகள் உருக ஆரம்பிக்கும் என்று கணித்துள்ளார் நாஸ்டிரடாமஸ். ஏற்கனவே வட துருவத்தில் வெப்ப நிலை அதிகரித்து வருவதாக விஞ்ஞானிகள் கூறி வருவது நினைவிருக்கலாம்.

### இஸ்ரேலுக்குப் பேராபத்து

2016ஆம் ஆண்டு இஸ்ரேலுக்குப் பேராபத்து வரும் என்பது நாஸ்டிரடாமஸின் இன்னொரு கணிப்பாகும். பல முனைகளிலிருந்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படுமாம். இருப்பினும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் படைகள் திரண்டு வந்து இஸ்ரேலைக் காப்பாற்றி விடுமாம்.

### உலகம் அழியும்

நாஸ்டிரடாமஸ் 2016ஆம் ஆண்டுக்கு கணித்துள்ள கணிப்புகளிலேயே இதுதான் கவலைக்குரியதாக உள்ளது. அதாவது 2016ஆம் ஆண்டு உலகம் அழிந்து விடும் என்று கூறியுள்ளார் அவர். ஈராக் போர்தான் உலக அழிவுக்கான முதல்படி என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால் மயன் காலண்டரில் கூட இப்படித்தான் உலகம் அழியும் என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் அந்தக் கணிப்பு பொய்த்துப் போனது. நாஸ்டிரடாமஸ் சொன்னதும் நடக்குமா அல்லது பூமி பிழைக்குமா என்பதை 2017ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரை பொறுத்திருந்து பார்ப்போம்.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாதா தாவூத் இப்ராஹிம்

சண். சரவணக்குமார்

**க**டத்தல் தொழிலில் மகாராஷ்டிராவினர் செய்ய முடியாத பல்வேறு வேலைகளை ஹாஜி மஸ்தான் கனகச்சிதமாக செய்து முடிப்பது வழக்கம். அதனால் மும்பை பொலிஸ் வட்டாரம் நன்கு அறிந்து, அவரைக் கண்காணித்து வந்தது. ஹாஜி மஸ்தான் தனது வீட்டை விட்டு வெளியே போகாமல், அவரது சகாக்களை வைத்து அரபிக்கடலில் தங்கம் மற்றும் கறுப்பு பணம் எனப்படும் ஹவாலா பணங்களை கடல் மூலம் பல்வேறு இடங்களுக்கு அரசாங்கத்திடம் சிக்காமல் கடத்துவதில் கில்லாடி. அந்தப் பணிகளை பெரும்பாலும் மார்வாடி சமூகத்தினர்களுக்கு செய்து கொடுப்பதால் மும்பையில் மிகப்பெரிய கடத்தல் மன்னனாக இருந்தார் ஹாஜி மஸ்தான்.

அப்படி, கடத்தலில் வரும் கறுப்புப் பணத்தை வெள்ளையாக மாற்ற மார்வாடி சமூகத்தினர், அந்தப் பணங்களை திரையுலக சினிமாவில் போட்டு சினிமா எடுப்பது போன்ற வேலைகளைச் செய்து வந்தனர். அப்படித்தான் சினிமா பிரபலங்கள் ஹாஜி மஸ்தானுக்கு அறிமுகம் ஆனதுண்டு. அதனால் சினிமாவில் பெரும்பாலும் ஹவாலா பணங்களை மொத்தமாக மாற்ற ஹாஜி மஸ்தான் அதிகம் தேவைப்பட்டார். அதனால்தானோ என்னவோ ஹாஜி மஸ்தான் பற்றி, அவரை முதன்மை நடிகராகச் சித்தரித்து காட்டி ஹாஜி மஸ்தான் செய்யும் வேலைகளை கதைக்களமாக்கி, பிரபல நடிகரை வைத்து ஒரு முன்னணி இயக்குநர் சினிமா ஒன்று எடுத்தார். அந்தப்படம் பயங்கர வெற்றி பெற்றது மும்பையில்.

அதுவரை அரசல் புரசலாக தெரிந்த ஹாஜி மஸ்தான், அதன் பிறகு வெகுஜன மக்களுக்கு நன்கு தெரியவந்தார். அதன் விளைவாக பாதுகாப்பு கருதி ஹாஜி மஸ்தான் தனது புகைப்படங்களை வெளியே வராமல் பார்த்துக்கொண்டார். இந்த சம்பவங்கள் அனைத்தும் தாவூத்துக்குப் பிடித்துப்போனது. ஹாஜி மஸ்தானிடம் பழக ஆரம்பித்தான். அத்தோடு அவர்கள் கடத்தும் பணத்தை அவர்களிடமிருந்து கடத்த திட்டம் தீட்டினான் தாவூத்.

## 18 வயதான தாவூத்தின் முதல் சம்பவம்

கடத்தலில் கொண்டு வரும் தங்க கட்டிகளை மும்பையில் பிரபலமான

**கடத்தலில் கொண்டு வரும் தங்க கட்டிகளை மும்பையில் பிரபலமான மூன்று சந்தையில் வைத்துதான் பிரித்து பல்வேறு நபர்களுக்கு அனுப்புவார்கள். கிராப்ஃபோர்டு, மோகத்தா, மணிஷ் போன்ற முக்கியமான மூன்று சந்தைகள் தான் அவை. இங்கு இருந்துதான் காய்கறிகள், அரிசி பருப்பு உள்பட பல்வேறு பலசரக்கு தானியங்களை மும்பையில் இருந்து பல்வேறு இடங்களுக்கு லொறி உள்பட சரக்கு வண்டிகளில் ஏற்றிக்கொண்டு செல்வது வழக்கம். இந்த சந்தைகளில் எப்பொழுதும் கூட்டம் நெரிசலாக இருக்கும் என்பதால் கடத்தல்காரர்களுக்கு தொழில் செய்ய நல்ல இடமாக இருந்தது.**

மூன்று சந்தையில் வைத்துதான் பிரித்து பல்வேறு நபர்களுக்கு அனுப்புவார்கள். கிராப்ஃபோர்டு, மோகத்தா, மணிஷ் போன்ற முக்கியமான மூன்று சந்தைகள் தான் அவை. இங்கு இருந்துதான் காய்கறிகள், அரிசி பருப்பு உள்பட பல்வேறு பலசரக்கு தானியங்களை மும்பையில் இருந்து பல்வேறு இடங்களுக்கு லொறி உள்பட சரக்கு வண்டிகளில் ஏற்றிக்கொண்டு செல்வது வழக்கம். இந்த சந்தைகளில் எப்பொழுதும் கூட்டம் நெரிசலாக இருக்கும் என்பதால் கடத்தல்காரர்களுக்கு தொழில் செய்ய நல்ல இடமாக இருந்தது.

இதுபோன்ற ஒரு கறுப்புப் பணத்தைக் கொண்டு செல்லும் ஒரு குழுவில் இருந்து வந்த தகவலை வைத்துக் கொள்ளை அடிக்கத் திட்டம் தீட்டினான் சிறுவனான தாவூத். அதற்காக அவன், யூசுப்கான், அபுபக்கர், இஜாஸ்ஜிங்கி, அசிஸ் டிரைவர், அப்துல் முத்தலிப், சையது சுல்தான், சிர்கான், உள்பட ஏழு நபர்களை கூட்டாளிகளாக வைத்துகொண்டு திட்டம் தீட்டினான்.

திட்டத்துக்குத் தேவையான ஒரு கார், கத்திகள், துப்பாக்கி உள்பட பல்வேறு ஆயுதங்களை வைத்துக்கொண்டு திட்டத்தை செயல்படுத்தும் இடமான தெற்கு மும்பையில் உள்ள மரைன் டிரைவ் பாலத்தை தேர்ந்தெடுத்து அங்கு ஒத்திகை பார்த்தனர். கொள்ளைக்கு திகதி குறித்து காத்திருந்து கொள்ளையடிக்கும் நாளும் வந்தது.

காரை அசிஸ் ஓட்டுவதும், ஆயுதங்களை தாவூத் மற்றும் சையது சுல்தான் பயன்படுத்துவது என்று திட்டம். இதில் சையது சுல்தான் கட்டுமஸ்தான உடம்புக்காரன். மிஸ்டர் மும்பைக்கு தயாராக இருந்தான். பல்வேறு போட்டிகளில் பங்கெடுத்து ஆணழகன் பட்டம் வாங்கி இருக்கிறான். அவனது ஆசை, கனவு எல்லாம் மிஸ்டர் மும்பை, மிஸ்டர் மகாரஷ்டிரா, அப்படியே மிஸ்டர் இந்தியா என்று அவனது கனவுகளின் தூரம் மிக அதிகம். அதற்குப் பணம் தேவை என்பதால் இந்த வேலையை செய்ய அவன் முன் வந்தான்.

தகவல் சொன்னபடி வண்டி ஒன்று பணத்தை ஏற்றிக்கொண்டு கிராப்போர்டு சந்தைப்பகுதியை கடந்து மெல்லோ சாலை வழியாக வருவதாக தகவல். கர்னக் பந்தர் பாலம் அருகில் வைத்துக் கொள்ளை அடிக்கத் திட்டம். வண்டி முகமது அலி சாலையை கடந்ததும், அந்த வண்டியின் பின்புறம் தாவூத்தின் ஆள்கள் பின் தொடர வேண்டும் என்பது தாவூத்தின் கட்டளை. வண்டியின் சாரதி உள்பட இரண்டு மார்வாடிகள் வரை வருவதாகவும் தகவல் வந்தது. அவர்களும் தங்களுக்கு பாதுகாப்புக்கு என்று இரும்புப் பைப்பில் கைப்பிடி போட்டு ராடு உள்பட துப்பாக்கி வரை வைத்து இருப்பதாக கூடுதல் தகவல் வேறு தந்து இருந்தனர்.

மதியம் இரண்டு மணியளவில் சீறிப்பாய்ந்த அந்த வண்டியை முட்டி மோதி சிறிய விபத்து போல உண்டாக்கி, உள்ளே இருந்தவர்களை கண்ணிமைக்கும் நேரத்தில் ஆயுத முனையில் மடக்கினர் தாவூத்தும் சையதும். மற்றவர்கள் அந்த வண்டியில் இருந்தவர்களை பேச விடாமல் மடக்கினர். அவர்களிடம் தாவூத் ‘இனி ஒரு வார்த்தை பேசினால், அடுத்து வார்த்தைகள் பேசமுடியாது. பெட்டி எங்கே’ என்று மிரட்டினான். சாரதி பயந்து போய் சீற்றின் பின்புறம் இருந்த இறுக்கி கட்டி சீல் வைக்கப்பட்ட கறுப்புப் பெட்டியை காட்டினான். கைப்பற்றினார்கள் தாவூத் அண்ட் கோ.

பெட்டியை உடைத்து பணக்கட்டுகளை பையில் போட்டுகொண்டவர்கள், அவர்களை தாக்கி விட்டு அந்த இடத்தை விட்டு சிட்டாகப் பறந்து விட்டனர். வேறு வழி தெரியாமல் பணத்தை பறிகொடுத்தவர்கள் பொலிஸுக்குப் போனார்கள். பைதோனி காவல் நிலையத்தில் குற்ற எண் 725/1974 என்று வழக்கு பதிவு செய்யப்பட்டது.

தாவூத் மற்றும் அவனின் கூட்டாளிகளுடன் சேர்ந்து மூன்று வாரங்கள் கழித்து தாவூத் தனது 19வது பிறந்தநாளை கொண்டாடும் பொழுது அன்றைய அனைத்து செய்திதாள்களிலும் மும்பை மெட்ரோபாலிட்டன் கார்ப்பரேசன் வங்கி வண்டியை மடக்கி ரூபாய் 4,75,000 கொள்ளை என்று செய்தி வந்தது. அதோடு இல்லாமல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் அனைவரும் 20 வயதுக்கு உள்பட்ட நபர்கள் என்கிற அதிர்ச்சி தகவலும் வந்ததோடு, அந்த கொள்ளையைத் திட்டம் தீட்டியவன் தாவூத் என்றும் செய்தி வந்தது. ஒரே சம்பவத்தில் மும்பை முழுவதும் பிரபலமானான் தாவூத் இப்ராஹிம்.

அதன்பிறகு தான் தெரிந்தது தாவூத் கொள்ளையடித்தது ஹவாலா பணம் இல்லை. அரசு கோ ஆப்ரடிவ் வங்கியின் பணம் என்று.

அதன் பிறகு மும்பை பொலிஸ் கவனம் தாவூத் பக்கம் திரும்பியது. அதுவரை நேர்மையான பொலிஸ்காரராக இருந்த தாவூத்தின் தந்தை இப்ராஹிம் கஸ்கர் கைது செய்யப்பட்டார். அதோடு அவர் அவமானம் தாங்காமல் தானே முன்வந்து தனது வேலையை ராஜினாமா செய்தார்.

(தோட்டக்கள் பாயும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறைகளுக்குள் உணவகம்





உணவகத்தை வித்தியாசமாக அமைக்க வேண்டுமென்றால் மலைகளுக்கு இடையிலோ, நீர் வீழ்ச்சிக்கு இடையிலோ அமைப்பார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆனால் கல்லறைகளுக்கு இடையே கட்டப்பட்டுள்ள உணவகத்தை பற்றி உங்களுக்கு தெரியுமா?

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் அமைந்துள்ளது அகமதாபாத் நகரம். இந்நகரத்தில் உள்ள உணவகம் ஒன்று தான் கல்லறைகளுடன் வித்தியாசமாக செயல்படுகிறது.

'நியூ லக்கி ரெஸ்டாரெண்ட்' என்பது இதன் உண்மையான பெயராக இருந்தாலும் கல்லறை உணவகம் என்ற பெயரே இப்பகுதியில் பிரபலம்.

மிகவும் பரபரப்பாக இயங்கும் இந்த உணவத்தில் இடை இடையே உள்ள கல்லறைகளை யாரும் கண்டுகொள்ளாமல் தங்களுக்குத் தேவையானவற்றை வாங்கி ருசித்தபடி செல்கின்றனர்.

என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? முதலில் இந்த இடத்தில் இஸ்லாமிய கல்லறை இருந்துள்ளதாக கூறப்படுகிறது. பின்னர் அந்த இடத்தில் தனது உணவகத்தை கட்ட அதன் முதலாளி கிருஷ்ணன் குட்டி முடிவு செய்துள்ளார். எனினும் அங்குள்ள கல்லறைகளை இடிக்க அவருக்கு மனமில்லை. எனவே கல்லறைகளை இடிக்காமல் அதனை சுற்றி தனது உணவத்தை அமைத்துள்ளார்.

சுமார் 12 கல்லறைகள் வரை இந்த உணவகத்தின் உள்ளே அமைந்துள்ளது. இரும்பு வேலி அமைத்து இந்த கல்லறைகள் பாதுகாக்கப்படுகின்றன. தினமும் உணவகத்தைத் திறக்கும் போதும், பின்னர் மூடும்போதும் உணவகத்தின் ஊழியர்கள் இந்த கல்லறைகளுக்கு மரியாதை செலுத்துவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இங்கு வரும் வாடிக்கையாளர்களும் இது ஒரு புது அனுபவமாக இருப்பதாக கூறிகின்றனர்.

# கால்களே கைகளாய்

அரிஸோனாவில் வசிக்கும் 27 வயது ப்ரையன் டாகலோக்கு பிறக்கும்போதே 2 கைகளும் இல்லை. துன்பமான வாழ்க்கை அமைந்தாலும் சாதாரண மனிதர்களைப் போல இயல்பான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார் ப்ரையன். கைகளுக்குப் பதிலாக கால்களைப் பயன்படுத்திக்கொள்கிறார். கால்களால் கார் ஓட்டுகிறார். டாட்டூ வரைகிறார். உலகிலேயே கைகள் இல்லாமல், டாட்டூவுக்குச் சான்றிதழ் வாங்கியிருக்கும் ஒரே டாட்டூ கலைஞர் இவர்தான்.



எல்லோரும் எனக்கு வாய்ப்பு கொடுப்பார்கள் என்று சொல்ல முடியாது. சிலர் சந்தேகத்துடன் வருவார்கள், டாட்டூவைப் பார்த்து திருப்தியாகச் செல்வார்கள். எல்லோரும் கால்கள் மூலம் வேலைகளைச் செய்வதைப் பார்த்து ஆச்சரியமடைகிறார்கள்.

எனக்குப் பிறக்கும்போதே கைகள் இல்லை. கால்களைக் கொண்டு, கைகளால் செய்யக்கூடிய அனைத்து வேலைகளையும் என்னால் செய்ய முடிகிறது. இதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. கால்களால் டாட்டூ வரைவதை அனுமதிக்கும் என் வாடிக்கை யாளர்கள்தான் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள். நம்பிக்கையும் முயற்சியும் இருந்தால் போதும். எது இல்லை என்றாலும் உலகில் வாழ்ந்துவிட முடியும் என்கிறார் ப்ரையன்.

# நீராவிக் கார்

உக்ரைனைச் சேர்ந்த கார் ஓட்டுனர்கள் மாற்று எரிபொருளைப் பயன்படுத்தி வருகிறார்கள். பெற்றோல், காஸ் போன்றவற்றின் விலையேற்றத்தை அவர்களால் சமாளிக்க முடியவில்லை. அதனால் மரத்துண்டுகளை எரித்து, நீராவி மூலம் வண்டி ஓடுவதற்கான ஆற்றலைப் பெற்றுக்கொள்கிறார்கள். இதனால் கணிசமாகப் பணம் மிச்சமாகிறது என்கிறார்கள்.

'ஒட்டோ மொபைல்' துறை மெதுவாக மின்சக்தியை நோக்கிப் பயணிக்கிறது. மரத்தை எரித்து, ஆற்றலைப் பயன்படுத்துவது என்பது பழைய வழிமுறை. முதலாம் உலகப் போரில் இப்படிப்பட்ட வாகனங்கள்தான் மிகவும் பிரபலமாக இருந்தன. இன்று உக்ரைன் ஓட்டுனர்கள் நவீன கார்களில் விறகில் நீராவியை உற்பத்தி செய்யும் பகுதிகளைப் பொருத்திக்கொள்கிறார்கள். யுஜின் செர்னிகோவ் தன்னுடைய ஒபெல் காரை இப்படி மாற்றிவிட்டார். கார் ஓட்டுவது நாளுக்கு நாள் செலவு பிடித்த விஷயமாகிவிட்டது. அதைச் சமாளிப்பதற்குத்தான் இப்படி யோசித்தேன். நான் இயற்பியல் ஆசிரியர்.

மரத்தை எரித்து, எவ்வாறு எரிபொருளை எடுப்பது என்பதை 2 மாதங்களில் இணையத்தின் மூலம் கற்றுக்கொண்டேன். என்னுடைய காரில் மரம் எரிக்கும் கலமும் உலோகக் கேனையும் பொருத்தி, அவற்றை கார் இன்ஜினுடன் இணைத்துவிட்டேன்.

100 கி.மீ. தூரத்தைக் கடக்க 18 கிலோ மரத் துண்டுகள் தேவைப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 492 7419

# தமிழர் தரப்பை ஏய்க்காட்டும் போக்கு தோடர வேண்டுமா...?

காணிகளை இராணுவம் கையேற்று வைத்திருப்பது காலத்தின் கோலமல்ல.

நாட்டுக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னரே, அரச குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. அதன் அர்த்தம் (நோக்கம்) என்ன என்றால் - தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இடங்களில், இன அமைப்பில் மாற்றங்களை இழைக்க வேண்டும் என்ற இழிவான கரவான எண்ணமே, அந்தக் குடியேற்றங்களுக்குக் காரணம்.

இத்தகைய குடியேற்றத் திட்டங்களினால், பாரம்பரியமாக, தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வந்த இடங்கள் அவர்களிடம் இருந்து பறித்து எடுக்கப்பட்டன.

மேற்போர்ந்த நிலையை விஸ்தாரமாக எடுத்து விவரித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். மாற்றம் நிதி நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் ஆற்றிய உரையிலேயே மேற் போந்த கருத்துக்களை - தகவல்களை அவர் வெளிப்படுத்தினார்.

இந்த நாட்டின் அரசுகளும், இராணுவத்தினரும் கிழக்கில், தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபகரித்து வைத்திருப்பதனையும், அவர் புள்ளிவிபரங்களுடன் அழுத்திக்காட்டி உள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் சிங்கள மக்களின் எண்ணிக்கை 1911 ஆம் ஆண்டு தொட்டு 1981 ஆம் ஆண்டுவரை 3.8 சதவீதத்தில் இருந்து 33.6 சதவீதத்திற்கு உயர்ந்தது என்றும் -

அதே காலத்தில், தமிழ் மக்களின் எண்ணிக்கை 56.8 சதவீதத்தில் இருந்து 33.7 சதவீதத்திற்குக் கீழிறங்கியது என்றும் - முதலமைச்சர் தொட்டுக் காட்டி உள்ளார்.

அதேபோன்று, அம்பாறை மாவட்டத்தில், சிங்கள மக்களின் எண்ணிக்கை ஏழு சதவீதத்தில் இருந்து. முப்பத்தெட்டு சத வீதத்துக்கு உயர்ந்தது என்ற புள்ளி விபரமும் அவரால் அதிகாரபூர்வமாக முன்வைக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமின்றி, இரண்டாயிரம் ஆண்டு காலமாக தமிழ் பேசும் மக்களே வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்து வருகின்றனர் என்பதனை முதலமைச்சர் புள்ளி விபரங்களுடன் விஸ்தாரமாக எடுத்துக்காட்டி உள்ளார்.

அத்தோடு --

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபையின் பின்ஹெய்ரோ கோட்பாடுகள், இடம்பெயர்ந்த மக்களினதும், அகதிகளினதும் தனி உருத்தாக, அவர்கள் தமது காணிகளையும் திரும்பப்பெறுவது தொடர்பில் வகை செய்வதனையும் முதலமைச்சர் தமது உரையில் வெளிச்சம் போட்டுக் காட்டி உள்ளார்.

இந்த நாட்டு அரசும் இராணுவமும் மக்களின் மிக முக்கியமான தனி உரித்தைப் பறித்து வைத்துப் பங்கம் உண்டாக்கி, அவர்களது வாழ்க்கையைப் பாழ்படுத்தின என்பதனையும், முதலமைச்சர் நிலை நிறுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு வழிகாட்டி ஆகும்.

வடக்கு மாகாணத்தை முழு அளவில் இராணுவ மயப்படுத்துவதன் ஊடாக, அதனை சிங்கள, பௌத்த மயமாக்குவதே கொழும்பு அரசுகளின் முக்கிய இலக்கு.

தார்மீக ஆட்சியிலும் சரி, ஆசியாவின் ஆச்சரியம் ஆட்சியிலும் சரி அதுவே ஒப்பேற்றப்பட்டது.

இப்போதைய நல்லாட்சியிலும் அது தொடர்ந்து ஊக்குவிக்கப்படுகிறது. தன்னை ஆட்சி பீடத்தில் அமரவைப்பதற்கு கைகொடுத்த -- காலாக இருந்த -- தமிழ்த் தரப்பை ஏய்க்காட்டும் போக்கு தலையெடுக்கக்கூடாது.

தீதும் நன்றும் பிறர்தர வருவதில்லை
அவரவர் தேடிக்கொள்ளும் வினையே
பின்னர் விதியாகி விடுகிறது...!

1979ஆம் ஆண்டு ஒவ்வொரு வருடமும் அடிமை முறை ஒழிப்புத் தினமாக டிசெம்பர் மாதம் 2ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்தது. இந்த நாளில் பல நாடுகளிலும் அடிமை ஒழிப்பு தொடர்பான பரப்புரைகளும், நிகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் உலகின் 102 நாடுகளில் இன்னும் 3கோடி மக்கள் அடிமைகளாக இன்னல்படுகின்றனர் எனச் சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதிலும் இந்தியாவில் 1.4 கோடி அடிமைகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதாவது உலகில் உள்ள அடிமைகளில் ஏறக்குறைய அரைவாசித் தொகையினர் இந்தியாவிலேயே உள்ளனர்.

சிறுவர்கள்,நிர்க்கதியானவர்களைப் பலவந்தமாகப் பிடித்துச் சென்று பிச்சை எடுக்க வைப்பவர்கள் முதல் கொண்டு, வறிய மக்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்து அவர்கள் அதைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அவர்களை மட்டுமன்றி அவர்களின் பரம்பரையே அடிமைகளாக்கும் பெரும் நிலச்சுவாந்தர்கள் வரை இன்னமும் இந்தியாவில் அடிமை முறை அழிந்து விடாமல் பாதுகாத்து வருகின்றனர். அடிமை முறை இந்தியாவில் சட்ட விரோதமாக்கப்பட்டிருந்த போதிலும், இந்த முறை இன்னும் வெவ்வேறு வடிவங்களில் நிலை கொண்டுள்ளது. இவற்றுக்கு எதிராக சமூக நலன் விரும்பிகள் எவ்வளவோ போராட்டங்களை நடத்திய போதும், அடிமை எஜமானர்கள் அரசியல் செல்வாக்கு, சட்டங்களில் உள்ள ஓட்டைகள் என்பவற்றைப் பாவித்து, அடிமை முறையைப் பாதுகாத்து வருகின்றனர். அடிமை சமூக அமைப்பு பல நூறு ஆண்டுகளுக்கு முன் சிதைக்கப்பட்டு விட்டாலும் கூட, உலகின் பல்வேறு பகுதிகளிலும் நிறம், சாதி,வறுமை என்பவற்றினூடாக அடிமைத்தனம் கட்டிப்பாதுகாக்கப்பட்டு வருகிறது.



# அழிந்து போகாத அடிமை வர்த்தகம்

மத்திய கிழக்கு நாடுகளில், வீட்டுப் பணிப் பெண்கள் முழுமையான அடிமைகளாகவே நடத்தப் படுகின்றனர். அவர்கள் பணிபுரியும் நேரம் 15, 10 மணி நேரத்துக்கு அதிகமாகவே உள்ளது. மேலும் வீட்டு எஜமானோ, எஜமானியோ செய்யும் எந்தக் கொடுமையையும் தாங்கித்தான் ஆக வேண்டும். அவர்கள் மீது என்ன கொடுமை இழைக்கப்பட்டா லும் அவர்கள் முறையிட இடமில்லை. தமது நாட்டுத் தூதரகங்களில் முறையிட அவர்கள் அனுமதிக்கப்படுவதுமில்லை. தூதரகங்களுடன் தொடர்பு கொள்ள அவர்களுக்கு எந்த ஒரு மாற்று ஏற்பாடும் இல்லை.

அதே நேரம், கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒரு நவீன அடிமை முறை உருவாகி வேகமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. வீட்டுப் பணிப்பெண்கள் என்ற பேரில் வெளிநாடுகளிலிருந்து பெண்களை இறக்குமதி செய்து வேலைக்கமர்த்துவது தவறாகும். சிங்கப்பூர், மலேசியா போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**- ஆசாத்**

நாடுகளிலும் இந்த முறை நிலவி வந்தாலும், அந்த நாட்டின் சட்டதிட்டங்கள் காரணமாக அது கொடூரமான முறையில் இருப்பதில்லை. ஆனால் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்கள் முழுமையான அடிமைகளாகவே நடத்தப்படுகின்றனர். அவர்கள் பணிபுரியும் நேரம் 15, 10 மணி நேரத்துக்கு அதிகமாகவே உள்ளது. மேலும் வீட்டு



© Sia Kambou/AFP/Getty Images

எஜமானோ, எஜமானியோ செய்யும் எந்தக் கொடுமையையும் தாங்கித்தான் ஆக வேண்டும். அவர்கள் மீது என்ன கொடுமை இழைக்கப்பட்டாலும் அவர்கள் முறையிட இடமில்லை. தமது நாட்டுத் தூதரகங்களில் முறையிட அவர்கள் அனுமதிக்கப்படுவதுமில்லை. தூதரகங்களுடன் தொடர்பு கொள்ள அவர்களுக்கு எந்த ஒரு மாற்று ஏற்பாடும் இல்லை. இளம் பெண்கள் எஜமானனின் பாலியல் வல்லுறவுக்கு உடன்படாவிட்டால் அவனின் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டும். அப்படி உடன்பட்டு விட்டாலோ எஜமானியின் கொடுமைக்கு உட்பட வேண்டி வரும்.

ஒரு வீட்டுப் பணிப் பெண்ணுக்கு என்ன நடந்தாலும் அது வெளியே தெரியவரப்போவதில்லை என்றளவுக்கு அங்கு நவீன அடிமைத்தனம் வலிமையாக நிலைபெற்றுள்ளது.

அண்மையில் சவூதி அரேபியாவில் பணிப்பெண்ணாக வேலை செய்த கொழும்பு தெஹிவளையைச் சேர்ந்த ஒரு பெண்., இலங்கையர் ஒருவருடன் தகாத உறவு கொண்டார் என்ற குற்றச்சாட்டில் கல்லால் எறிந்து கொல்லப்படும் மரண தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார். ஆனால் இலங்கை வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் அப்பெண்ணைச் சென்று சந்தித்த போது தன்னைப்பிடித்து தன் மேல் பொய்க்குற்றம் சுமத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் சவூதி நீதிமன்றம் அவனின் முறைப்பாட்டை ஏற்க மறுத்துக் கொடிய முறையிலாக மரண தண்டனையை விதித்துள்ளது.

தற்சமயம் அவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்புத் தொடர்பாக மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

அவர் அப்படிக் குற்றம் செய்திருந்தாலும் கூட ஒரு பாலியல் தவறுக்காக ஒரு பெண் கல்லெறிந்து கொஞ்சம் கொஞ்சமாக துடிக்கத் துடிக்கச் சாகடிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமாட்டான். ஆனால் சவூதியில் அந்தக் கொடிய கொலையில் சாதாரண மக்களும் பங்கு கொள்வார்கள் என்பது தான் வெறுக்கத்தக்க வியப்பு.

ஏற்கனவே மூதூரைச் சேர்ந்த ரிஷனா என்ற இளம்பெண் குழந்தைக்குப் பாலூட்டும் போது குழந்தை 'புரைக்கேறி' இறந்து விட்டது என்பதற்காக கழுத்து வெட்டிக் கொல்லப்பட்டாள்.

மத்திய கிழக்குக்குப் பணிப்பெண்களாகச் சென்ற எத்தனையோ பெண்கள் பிணங்களாகத் திருப்பி அனுப்பப்பட்டனர். பணிப்பெண்களின் உடலில் சூடான ஆணிகளை ஏற்றுவது முதற்கொண்டு பலவிதமான சித்திரவதைகள் அவர்கள் மேல் நடத்தப்படுகின்றன.

இவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதுமில்லை. ஆனால் எமது பெண்கள் மட்டும் சிறிய குற்றங்களுக்காக கொடிய முறையில் மரணங்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

இப்படியாக உயிருக்கே உத்தரவாதமில்லாத நிலையில் ஏன் தொடர்ந்தும் எமது பெண்கள் அந்த நாடுகளுக்குப் பணிப் பெண்களாகச் செல்கின்றனர் என்ற கேள்வி எழுகின்றது.

முதல் காரணம் வறுமை தான். தமது வாழ்வாதாரங்களை பெற்றுக் கொள்ள வேறு எந்த வழியும் இல்லாத நிலையிலேயே பெண்கள் இப்படியான பணிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

குறிப்பாக ஒரு காலத்தில் புற்பாய் இழைத்தல், கைத்தறி நெசவு உட்படப் பல சுயதொழில்கள் கிழக்கில் மேற்கொள்ளப்பட்டன. திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக அவை இல்லாமலே போய் விட்டன. இவ்வாறே மலையகத்தில் வழங்கப்படும் ஊதியம் போதாத நிலையில் அவர்களும் வெளிநாட்டு வீட்டுப் பணிபெண்கள் வேலையை நாடுகின்றனர்.

அதே வேளை சுற்றுலாத் துறைக்கு அடுத்ததாக அந்நியச் செலாவணி வருமானம் இப்படியான வெளிநாட்டு பணிகள் மூலமாகவே கிடைக்கின்றது. எனவே அரசாங்கம் கூட மறைமுகமாக இந்த வெளிநாட்டுப் பணி விவகாரத்துக்கு ஆதரவு வழங்கி வருகிறது.

ஆனால் இதன் காரணமாக இப்பெண்களின் மனித உரிமைகள் உதாசீனம் செய்யப்பட்டு அடிமைகளாக நடத்தப்படுகின்ற னர் என்பதை மறுத்து விட முடியாது.

தொழில் வாய்ப்புக்கள், சுயதொழில் வாய்ப்புக்கள் என்பன தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தும் போது மட்டுமே இந்த நவீன அடிமைத்தனத்தை இல்லாமல் செய்ய முடியும்.

**தொழில் வாய்ப்புக்கள், சுயதொழில் வாய்ப்புக்கள் என்பன தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தும் போது மட்டுமே இந்த நவீன அடிமைத்தனத்தை இல்லாமல் செய்ய முடியும்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உற்சாகமாக இருந்தால் இளமையாக இருக்கலாம்



மனதை எப்போதும் உற்சாகமாக வதைத்துக் கொண்டால் நாம் எப்போதுமே இளமையாக இருக்கலாம். அதெப்படி? பிரச்சினைகள் வரும் போது மனதை உற்சாகமாக வைத்துக் கொள்ள முடியும்? என்று நீங்கள் கேட்கலாம்.

முடியும் என்று எதையும் நேர்மறையாக சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் நம்மால் எந்த சூழ்நிலையிலும் உடைந்து போகாமல் மகிழ்ச்சியாக வாழ முடியும்.

ஒரு நகைச்சுவை இருக்கிறது. அதாவது நீங்கள் வாழ்க்கையில் ஏன் கவலைப்பட வேண்டும்? எல்லாவற்றிற்குமே இரண்டு வாய்ப்புகள்தான்



உள்ளன.

வாழ்க்கையில் ஒன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள் அல்லது நோய்வாய்ப்படுவீர்கள். முதலில் நீங்கள் நலமாக இருக்கிறீர்கள் என்றால் நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? இல்லை, உடல் நலக் குறைவு ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அதற்கும் இரண்டு வாய்ப்புகள்தான்.

ஒன்று நீங்கள் குணமடைவீர்கள். இல்லையென்றால் இறந்துவிடுவீர்கள். நீங்கள் குணமடைவீர்கள் என்றால் ஏன் அதைப் பற்றி கவலைப்பட வேண்டும். இல்லை இறந்துவிட்டால் ஒன்று நீங்கள் சொர்க்கத்திற்கு செல்வீர்கள்; இல்லை நரகத்திற்கு செல்வீர்கள்.

சொர்க்கத்திற்குச் சென்றால் அதைப் பற்றி கவலைப்பட வேண்டுமா என்ன? இல்லை நரகத்திற்குச் செல்வீர்கள் என்றால்...அங்குதான் உங்களது ஏராளமான நண்பர்கள் இருப்பார்களே.. அவர்களுடன் அரட்டை அடித்தே காலத்தை கழிக்கலாமே பிறகு ஏன் கவலைப்பட வேண்டும்? இதுதான் அந்த நகைச்சுவை.

ஆனால் இது நகைச்சுவை மட்டுமல்ல. வாழ்க்கையின் சுவையை அறியும் வழியும் கூட..எதிலும் ஒன்று நல்லது அல்லது கெட்டது நடக்கும். நல்லது நடந்தால் கவலைப்பட ஒன்றுமில்லை, கெட்டது நடந்தால் அதிலும் இரண்டு விஷயங்கள். இப்படி இருக்க, உங்கள் வாழ்க்கைப் பற்றிய கவலையை தூக்கி எறிந்து விட்டு, வாழ்க்கை என்பது பூங்காவனம் அல்ல போராட்டக்களம் என்பதை உணருங்கள்.

போராட்டக்களத்தில் இழப்புகளும், வெற்றிகளும் சாதாரணம். எதற்கும் கலங்காமல் வாழ பழகிக் கொள்ளுங்கள். எப்போதும் நடப்பவை எல்லாம் நன்மைக்கே என்று அதன் போக்கில் உங்களது வாழ்க்கையை சிறப்பாக வாழ பழகிக் கொள்ளுங்கள்.

நீங்கள் எந்த பிரச்சினையையும் சந்திக்காமல் வாழ்க்கையில் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்றால் நீங்கள் தவறான பாதையில் பயணிக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். முதலில் உங்கள் பாதையை மாற்றுங்கள். சில சமயங்களில் இது பெரிய அளவில் முன்னேற்றத்தை அளிக்கும்.

புதிதாக செய்யும் போதுதான் உற்சாகம் அதிகரிக்கும். அரைத்த மாவையே அரைத்து நீங்கள் எதையும் சாதிக்க முடியாது என்பதை உணருங்கள்.

உற்சாகம் உங்களுக்குள்தான் இருக்கிறது. அதை வெளியில் தேடாதீர்கள். மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டுங்கள்.

---

# மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி?



சரியான திட்டமிடுதல், அவசர மற்றும் அவசியப் பணிகளை முதலில் முடித்தல், வேலைப்பளுவில் அவ்வப்போது ஓய்வு எடுத்தல், மனதை தளர்வாக வைத்திருத்தல் தனிமை மற்றும் எதிர்மறை சிந்தனைகளைத்தவிர்த்து நேர்மறை சிந்தனை நண்பர்களுடன் நிறைய நேரம் செலவிடுதல், தியானம்,உடற்பயிற்சிகள், பொழுதுபோக்குக்காட்சிகள் முதலானவை மனஅழுத்தத்திற்கு மருந்துகளாக பலராலும் அவ்வப்போது பரிந்துரைக்கப்படுகின்றன.

இவைகளெல்லாம் சொல்வதற்கு எளிமையாக இருந்தாலும், இவற்றில் செயல்வடிவில் உள்ள பிரச்சினைகள் அதனை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே எளிதில் புரியும்.இந் நோயியில் இருந்து நிவாரணம் பெற என்ன செய்ய வேண்டும்? மன அழுத்தம் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதை தடை செய்ய கீழுள்ள ஆலோசனைகளை பின் பற்றுங்கள். அவை உங்களுக்கு உதவக்கூடும்.

உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், உணர்வுகளைப் பற்றியும் நடந்தவைகள் பற்றி நீங்கள் கண்டிப்பாக யாருடனாவது பேசுங்கள், உங்கள்குடும்ப அங்கத்தினரிடமோ அல்லது நண்பர்களிடமோ இது பற்றிக்கூறுவதற்கு விரும்பாவிட்டால் இதற்காக தகுந்த ஆலோசனைகள் வழங்கக்காத்திருக்கும் மனநிலை ஆலோசகனை அணுகலாம்.அப்போதுதான் உங்களுக்கு விடிவு கிடைக்கும். நீங்கள் அனுபவித்த மகிழ்ச்சியான விடயங்களை மீண்டும்செய்து பாருங்கள். அன்றாடம் உடற்பயிற்சி செய்ய ஆரம்பியுங்கள். இந்த சக்தியூட்டும் செயற்பாடு உங்கள் பொது சுகாதாரத்தைப்பேணுவதோடு மன உளைச்சலைக்குறைக்கவும் உதவுகிறது.

உலகில் வாழும் அனைவருமே தங்கள் வாழ்நாளின் ஒரு முறையாவது தற்கொலை செய்யலாமா என்ற நிலைமைக்கு வருகின்றனர் என்று மனோதத்துவம் சொல்கிறது. இன்றைய வேகமான உலகத்திற்கு ஈடுகொடுத்து நாம்காரியங்களை செய்யும்போது மெல்ல மெல்ல நம்மை அமுக்கி மூழ்கடிக்கவரும் அரக்கனே மன அழுத்தம். இதை உடனே அடையாளம்கண்டு கொண்டு தீர்வு காண்பதன் மூலம்பெரும் இழப்புகளை தவிர்க்க முடியும்.

**முதல்படி:** சிறு பிரச்னைகளுக்கு கூடபெரிய அளவில் கவலைப்படுவதே மனஅழுத்தத்துக்கான முதல்படி. மனஅழுத்தத்தால் உடல், வேதியியல் மாற்றத்துக்கு உள்ளாகிறது. இதனால் இளம் வயதிலேயே வயதான தோற்றம் ஏற்படும். ஒருவரின் தனித்தன்மை,முயற்சி, சக்தி ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படுகிறது.

**நல்லவர்களையும் முட்டாளாக்கும்:** மனஅழுத்தம், நல்லஅறிவு படைத்தவர்களையும்,பழக்கவழக்கம், நடை, உடை,பாவனைகளில் முட்டாள்களாகக்காட்டுகிறது. ஒருவருக்கு உடலளவிலும், மனதளவிலும் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. உறவினர்கள், நண்பர்களிடமிருந்து பிரியும்நிலை உண்டாகிறது.

**உணர்வற்ற மனிதனாக்கும்:** மனித உணர்வில், பாதிப்பை உண்டு பண்ணுகிறது.தேவையில்லாத இடங்களில், தேவையற்ற உணர்வுகளை வெளிப்படுத்தவைக்கிறது.சமுதாயத்திலிருந்து ஒரு மனிதனை பிரித்துக்காட்டுகிறது. இதை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சரி செய்யாவிடில் மனநோய் அளவுக்கு கொண்டு செல்கிறது.

**எவ்வாறு கட்டுப்படுத்துவது:** அவசரஉலகில் மனஅழுத்தம் எல்லா மனிதர்களுக்கும் ஏற்படுகிறது. என்னபிரச்னையாக இருந்தாலும் அதை தைரியமாக எதிர்கொள்ளப் பழகவேண்டும். சிறு விஷயத்துக்கெல்லாம் கவலைப்படாமல், அதை சரி செய்யவேண்டும். சரி செய்ய முடியாத பிரச்னை எனில் ,அதையே நினைத்து கவலை கொள்ளக்கூடாது.

**உடனே சரி செய்யுங்கள்:** பிரச்னை ஏற்பட்டு மன அழுத்தம் தோன்றும் போது, எண்ணத்தை மாற்றமுறப்படுங்கள். நண்பர் களுடன்மனம்விட்டு பேசுங்கள். இதனால்அழுத்தம் குறையும். எளிய உடற்பயிற்சி, யோகா மற்றும் தியானம்ஆகியவையே மனஅழுத் தத்துக்கு சிறந்தமருந்தாக கருதப்படுகிறது. வார இறுதி நாட்களில் புதிய இடங்கள் ,சுற்றுலாத் தலங்களுக்கு பயணம் மேற்கொள்ளுங்கள். எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளப் பழகிக் கொண்டால் மனஅழுத்தத்தை மறந்து விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீங்கள் இதில் எந்த ரகம்

**ஒருவருடைய ஜாதகத்தை பார்த்து அவர் எப்படி பட்டவர் அவர் என்னவாக மாறுவார் அவருடைய எதிர்காலம் எப்படி இருக்கும் அவர் மற்றவரிடம் எப்படி பழகுவார் என்பதை கூற முடியும்.**

**அதுமட்டுமில்லாமல் கைரேகை கணினி ஜோசியம் கூட நாம் கடந்து விட்டோம்.**

**நமது உடல் வாகு அடிப்படை கொண்டு ஒருவரின் கை விரல்களின் நீளத்தை வைத்தும் கூட அவர் எப்படிப்பட்டவர் என்பதை அறிந்துக் கொள்ள முடியுமாம்.**

## இளகிய மனம்



**கவர்ந்திழுக்கும் தன்மை**

நீங்கள் மிகவும் எளிதாக அனைவரிடமும் பேசிப் பழகும் நபராக இருப்பீர்கள்.

மற்றவர்கள் உங்கள் மீது விரைவாக ஈர்ப்புக் கொள்வார்கள். உறுதியான, தீர்க்கமான முடிவுகளை எடுப்பதில் சாமர்த்தியம் அதிகமாக இருக்கும்.

**இளகிய மனம்**

நீங்கள், துன்பப்படும் மற்றவர் மீது அக்கறை எடுத்துக்கொள்வீர்கள், இளகிய மனமுடைய நபராக வாழ்வீர்கள்.

உங்களால் முடிந்த வரை உதவி, குறைந்தபட்சம் மற்றவருக்காக வருத்தம் கொள்ளும் மனோபாவமாவது இருக்கும்.


**விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள்**

இவர்களது அறிவாற்றல் விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் அளவுக்கு இருக்கும். பிரச்சினைகளுக்கு முடிவு கண்டுபிடிப்பதில் ஆர்வம் காட்டுவார்கள்.

**சவாலான வேலைகள் எல்லாம் பொழுது போக்கு மாதிரி**

இவர்களுக்கு கடின வேலைகள் செய்வதென்றால் பிடிக்குமாம். கடினமான வேலைகளை முதலில் முடித்துவிடத் துடிப்பார்கள்.

திடீரென முளைக்கும் பிரச்சினைகளைக் கூட கையாளும் திறன் கொண்டவர்களாக இருப்பார்கள்.



## தன்னம்பிக்கை

**தன்னம்பிக்கை**

தன்னம்பிக்கை மிக்கவர்களாகவும், நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் இவர்கள் இருப்பர்கள்.

இவர்கள் தங்களை, தாங்களே மிகவும் விரும்பும் நபர்களாக இருப்பார்கள்.

**நேரத்தை வீணாக்க வெறுப்பார்கள்**

இவர்களைப் பொறுத்தவரை நேரம் எப்போதும் பொன் தான். நேரத்தை வீணடிக்க இவர்களுக்குப் பிடிக்காது.

நேரத்தை வீணடிக்கும் மனிதர்களையும் இவர்களுக்குப் பிடிக்காது.

**தலைமை குணம்**

எந்த வேலையையும் யோசிக்காமல் செய்ய மாட்டார்கள். அது எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும் சரி.

வேலையாக இருந்தாலும் சரி, உறவுகளாக இருந்தாலும் சரி அனைவருக்கும் மதிப்பைக் கொடுக்கும் குணம் உடையவர்கள்.

**நல்ல மனம்**

இயல்பாகவே நல்ல மனம் படைத்தவராக இருப்பார்கள், அமைதியானவர் என்ற பெயர் பெற்றிருப்பர். சண்டை சச்சரவுகளை வெறுக்கும் நபர்களாக இருப்பார்கள். சண்டை ஏற்படும் சூழ்நிலையைக் கூட தவிர்த்துவிடுவார்கள்.

**கூட்டுறவு**


அனைவருடனும் ஒத்துழைப்புத் தந்து வாழும் நபராக இருப்பார்கள். இவர்கள் சிறந்த ஒருங் கிணைப்பாளராகத் திகழ்வார்கள். நட்பு, காதல், வேலை போன்றவைக்கு நியாயமாக இருப்பார்கள்.

**அடிக்கடி கோபம்**

குணம் இருக்குமிடத்தில் தான் கோபம் இருக்கும் என்பார்கள். இவர்களும் அப்படித் தான். சிறு, சிறு விஷயங்களுக்குக் கூட அடிக்கடி கோபம் ஏற்படும். சிறிய விஷயத்துக்கு பெரிய வாக்குவாதம் செய்வார்கள்.

**வெறுக்க மாட்டார்கள்**

வாக்குவாதம் கோபம் ஒருபுறம் இருந்தாலும், மற்றவர்களை வெறுக்க மாட்டார்கள். ஆனால், ஒருவர் தனக்கு தேவையில்லை எனத் தெரிந்தால், பொய்யாக நடித்துக்கொண்டு உடன் இருக்காமல், முற்றிலுமாக விலகிவிடும் குணம் கொண்டிருப்பார்கள்.



## நல்ல மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம் - 54

'உடனடியாக கில்டா லோபஸை அழைத்து வருங்கள்!' என்று கத்தினார்.
கில்டா பதைபதைப்போடு வந்து சேர்ந்தார். அவரை உற்றுப் பார்த்தார் காஸ்ட்ரோ.
'நான் கேள்விப்பட்டது உண்மையா?'
கில்டா பதில் பேசவில்லை.
'சொல், உனக்கு திருமணம் நிச்சயித்து விட்டார்களாமே! இது உண்மைதானா?'
கில்டா தலையசைத்தான். 'ஆமாம். அவள் பெயர் பான்கிட்டா!'
'இதை ஏன் முன்பே சொல்லவில்லை. நாம் மொன்கடாத் தாக்குதலை திட்டமிட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது தெரியும் தானே?'
'தெரியும். நான் கட்டாயம் அதில் கலந்து கொள்வேன்'
'மேலும்... நீ எதுவும் சொல்ல வேண்டாம். நீ என்ன செய்வாய் என்று எனக்குத் தெரியாது. இன்றே நீ அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்'
கிறிஸ்துவ முறைப்படி திருமணம் செய்து கொள்வதையே அவர்கள் விரும்புவார்கள் என்பதை உணர்ந்த காஸ்ட்ரோ அன்றே தேவாலயத்தைத் தொடர்பு கொண்டு தேவையான கட்டணத்தைச் செலுத்தினார். புதுத்துணிகள் வாங்கப்பட்டன. திருமணம் நடைபெற்றது.
இந்தப் பாசம், பரிவு எல்லாம் மற்றவர்களுக்குத் தான். காஸ்ட்ரோ தன் வீட்டுக்குப் போவதை நிறுத்தி விட்டிருந்தார். பொதுவாக வெளியிடங்களுக்கே அதிகம் போவதில்லை. வழக்கறிஞர் உடையைத் தொடுவதே இல்லை. ஒரே இடத்தில் நீண்ட நேரம் தங்குவதில்லை. வெளியாள்களிடம் புதியவர்களிடம் பேசுவதில்லை. கிட்டத்தட்ட தலைமறைவு வாழ்க்கை என்றே சொல்லலாம்.
மிகப்பெரிய திட்டத்தைச் செயலாக்க வேண்டிய நேரத்தில் அநாவசியமாக யாருடைய சந்தேகத்தையும் சம்பாதித்துக் கொள்ளக் கூடாது என்பதில் அவர் தெளிவாக இருந்தார்.
தாக்குதலுக்கு நாள் குறித்தாகி விட்டது. ஜூலை 26,1953. ஆள்கள் தயார். (குறைவாக இருந்த போதிலும் ஆயுதங்கள் தயார். ஜூலை 26 சாதாரண ஒரு தினம் அல்ல. காஸ்ட்ரோவின் புரட்சி குருநாதர் ஹொஸே மார்த்தி தனது முதல் சுதந்திரப் போரைத் தொடக்கிய நாள். இது தவிர மற்றொரு முக்கியத்துவமும் உண்டு. இயேசுநாதர் உயிர்த்தெழுந்த தினத்தை ஜூலை மாதம் தான் தடல்புடலாகக் கொண்டாடுவார்கள். ஆனால், கடவுள் நம்பிக்கையற்ற காஸ்ட்ரோவுக்கும் இயேசு நாதர் உயிர்தெழுந்ததுக்கும் என்ன தொடர்பு?
இருக்கிறது. மொன்கடா இராணுவ முகாமைத் தாக்கும் போது இந்தக் கொண்டாட்டங்கள் கைகொடுக்கும் என்று காஸ்ட்ரோ கணக்குப் போட்டார். இராணுவத்தில் பலரும் விடுப்பு எடுத்துக் கொள்ளும் சாத்தியம் உண்டு. உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க பலர் நகரத்துக்குச் சென்று விடக்கூடும். இந்தச் சந்தர்ப்பத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள அவர் விரும்பினார்.
ஜூலை 23. கிளம்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது. காஸ்ட்ரோ தன் வீட்டுக்குச் சென்றார். ஃபிடலிட்டாவை கட்டிப்பிடித்து முத்தமிட்டார். புகைப்படம் எடுத்துக் கொண்டார். மிர்தாவிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார். தன் தம்பி ரால் காஸ்ட்ரோவுடன் சிறிது பேசினார்.
காஸ்ட்ரோ தனது திட்டத்தில் மிகத் தெளிவாக இருந்தார். மொத்தம் 135 பேர் மொன்கடாவைத் தாக்கி, கைப்பற்ற வேண்டும். மொன்கடாவை முற்றுகையிடும் அதே சமயம் மற்றொரு குழு. (இதில் 30 பேர் இருந்தனர்) பேயோ முகாமைக் காக்க வேண்டும். அதே சமயம் மருத்துவமனையையும் கைப்பற்ற வேண்டும். மருத்துவமனைத் திட்டத்துக்கு இரண்டு பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தாதி உடையில் உள்ளே நுழைவதற்கு அவர்களால் சுலபமாக முடியும் என்பதால் இந்த ஏற்பாடு.



யார் யார் எந்தெந்தக் குழுவில் இணைய வேண்டும் என்று விவாதித்தனர்.
நானே தலைமை ஏற்கின்றேன்' என்றார் காஸ்ட்ரோ.
'வேண்டாம். அதை நான் பார்த்துக் கொள்கிறேன். இது மிகவும் ஆபத்தான பணி. என்னிடம் அந்தப் பொறுப்பை ஒப்படையுங்கள்' என்றார் ஆபேல் எனும் சகபோராளி.
'இல்லை ஆபேல், நமக்குள் விவாதம் வேண்டாம்'

## சொற்சிலம்பம் போட்டி இல. 703

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | 6 |
| 7 | | ■ | 8 | 9 | | | |
| | ■ | 10 | | | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | | ■ | 14 |
| ■ | 15 | | 16 | | ■ | 17 | |
| 18 | | ■ | | ■ | 19 | | |
| | ■ | 20 | | | | ■ | |
| 21 | | | | ■ | 22 | | |

அனுப்புபவர் பெயர்:.......................................
விலாசம்:.......................................
.......................................
கையொப்பம்:.......................................

### மேலிருந்து கீழ்

1.எச்சரிக்கை நிறம்.
2.ஒரு பறவை.
3.இந்து சமயத்தின் உட்பிரிவு.
4.கொஞ்சுதல்.
5.பண்டைக்காலத்தில் வழக்கில் இருந்த தூர அலகு.
6.இதுவும் கூட ஓர் தூர அலகு.
9.இளைஞன்.
10.சீத நோய்.
12.தங்களுடைய.
14.பெற்றோரும் பிள்ளைகளும்.
16.சேலைக்கு இது முக்கியம்.
17.நடக்கும்படியான ஏவல்.
18.இடபம்.
19.தாளித்தால் இது வாசனை தரும்.
20.ஏவுகணை ரகம்.

### இடமிருந்து வலம்

1. வைத்திய சேவை வழங்கல்.
4.நிர்வாகம்.
7. காற்று.
8.பிரித்தல்.
10.இணக்கம்.
11.ஒரு கிழமை.
13.மேல்நாட்டு குடிபானம் .
15.ஆறறிவு படைத்தவன்.
17.மத்தி.
18.கேள்விச் சொல்.
19.ஒரு வாத்தியக்கருவி.
20.உண்பது இதனை.
21.சீட்டாட்டத்தில் முக்கிய சீட்டு.
22.மனிதரின் பேதம் பாராட்டலில் இதுவும் ஒன்று.

## சொற்சிலம்பம் போட்டி இல. 703

சொற்சிலம்பம் போட்டி 703ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் 30 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2016.01.06 மற்றும் 2016 01. 13 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 700இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | கே. இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை. |
| 2 ஆம் பரிசு | திருமதி.செ.பூமணி, இல 15/06, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம். |
| 3 ஆம் பரிசு | க. தில்லையம்பலம், கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி. |

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத் தின் பின்னர் அலுவலக நேரத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 701க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**
1.வைகறை.
2.கார்.
3.சித்திரம்.
4.கர்ப்பம்.
5.மாதம்.
6.திரை.
8.தரும்.
11.பல்.
12.பசளை.
13.கண்ணியம்.
14.விசும்பு.
15.தர.
17.உபரி.
18.தம்பி.
19.சதி

**இடமிருந்து வலம்**
1.வைகாசி.
4.கருமாதி.
7.கர்த்தர்.
9.தரை.
10.திருப்பம்.
12.பரம்பல்.
14.விசம்.
15.தண்.
16.சுளை.
18.தரணி.
19.சபதம்.
20.புத்திரி.
21.பிணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**- வேல்தர்மா**




**ஐ எஸ்** என்றும் ஐ எஸ் ஐ எஸ் என்றும் ஐ எஸ் ஐ எல் என்றும் அழைக்கப் படும் இஸ்லாமிய அரசு அமைப்பில் முப்பதினாயிரம் உறுப்பினர்கள் இருப்பதாக நம் பப்படுகின்றது. அதில் பதினை யாயிரம் பேர் 90இற்கு மேற்பட்ட நாடுகளில் இருந்து போய் ஐ எஸ் அமைப்பில் இணைந்துள்ளார்கள். அபு பக்கர் அல் பக்தாதி தலைமையில் இயங்கும் ஐ எஸ் அமைப்பு தற்போது சிரியாவின் கிழக்குப் பகுதியிலும் ஈராக்கின் மேற்குப் பகுதியிலும் பெரு நிலப்பரப்புக்களை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

### வடிவங்களைமாற்றிக் கொண்டிருக்கும் ஐ எஸ்

**முதல் அவதாரம் அல் கெய்தாவின் கிளை:**

2003ஆம் ஆண்டு சதாம் ஹுசைன் பேரழிவு விளைவிக்கும் படைக்கலன்களை வைத்திருக் கின்றார் எனப் பொய் சொல்லி ஈராக்கை அமெரிக்கப்படைகள் ஆக்கிரமித்தன. அப்போது ஈராக் கிற்கான அல் கெய்தா என ஒரு அமைப்பு ஈராக்கில் ஜோர்தானிய ரான அபு முசாப் அல் ஜர்காவியி னால் உருவாக்கப்பட்டு அது அமெரிக்கப்படைகளுக்கு எதிராகப் போராடியது. பின்னர் 2004ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அது அல் கெய்தாவின் ஒரு கிளை அமைப்பாக மாற்றப்பட் டது. சுனி முஸ்லிம் அமைப்பான ஈராக்கிற்கான அல் கெய்தா அமெரிக்காவுடன் ஒத்துழைப்பவர் களையும் சியா முஸ்லிம்களையும் கொன்று குவித்தது. இந்த அமைப் பால் ஈராக்கில் சுனி முஸ்லிம்களுக் கும் சியா முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதல் உருவாகி அதில் பல அப்பாவிகள் கொல்லப்பட்டனர். பின்னர் இந்த அமைப்பு,தனது தாக்குதல்களை ஜோர்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கும் விரிவு படுத்தியது.

**இரண்டாவது அவதாரம் ஐ எஸ் ஐ எஸ்:**

ஈராக்கிற்கான அல் கெய்தா பின்னர் தனது பெயரை ஐ.எஸ். ஐ.எஸ் என மாற்றிக் கொண்டது. இஸ்லாமிய முறைப்படியான அரசு ஒன்றை தாம் நிறுவுவதாக அவர்கள் பிரகடனப்படுத்தினர். அல் கெய்தா அமெரிக்காவை ஒழித்துக் கட்டிய பின்னர் இஸ்லாமிய அரசு உருவாக்கப் பட வேண்டும் என்ற கொள்கையுடை யது. ஐ எஸ் அமைப்பு இஸ்லாமிய மார்க்கப் படி ஆட்சியை நிறுவி அதன் மூலம் அமெரிக்காவை ஒழித்துக் கட்ட வேண்டும் எனக் கூறுகின்றது. இஸ்லாமிய அரசை உருவாக்கியதாக ஐ எஸ் அமைப்பு அறிவித்த பின்னர் உலகெங்கும் இருந்தும் பல இளையோர்கள் அதில் இணைந்து வருகின்றனர்.

**மூன்றாவது அவதாரம் அசாத்திற்கு எதிரான கிளர்ச்சியாளர்கள்:**

சிரியாவில் அரபு வசந்தம் ஆரம்பித்த பின்னர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் சிரிய அதிபர் பஷார் அல் அசாத்திற்கு எதிராகப் போரா டத் தொடங்கினர். இதனால் அசாத்திற்கு எதிரான மத்திய கிழக்கு சுனி ஆட்சியாளர்களிட மிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு பெரும் நிதியையும் படைக்கலன்களையும் பெற்றது.

**நான்காம் அவதாரம்: அல்கெய்தாவிற்கு எதிரான அமைப்பு**


சிரிய அதிபர் அசாத்திற்கு எதிராகப் போராடும் இன்னும் ஒரு அல் கெய்தாவின் கிளை அமைப்பான ஜப்ரத் அல் நஸ்ராவிற்கு எதிராக தாக்குதலைத் தொடுத்தது. இதனால் சிரிய உள்நாட்டுப் போர் ஒரு மும்முனைப் போராக மாறியது.

**ஐந்தாம் அவதாரம்: மரபுப் படையணி**

சிரியாவில் பெரு நிலப்பரப் பைக் கைப்பற்றிய அபூபக்கலர் அல் பக்தாடி தலைமையிலான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஈராக்கில் மிகக் கடுமையான தாக்குதலைத் தொடுத்தது. 2014ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் ஈராக்கிலும் சிரியாவிலும் பத்துக்கு மேற்பட்ட நகரங்களைக்கொண்ட பெரு நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். ஈராக்கியப் படையின ருக்கு அமெரிக்கா வழங்கியிருந்த பல படைக்கலன்களையும் பார ஊர்திகளையும் ஐ எஸ் அமைப்பினர் கைப்பற்றியதுடன் சதாம் ஹுசைனின் முன்னாள் படைத்துறை வீரர்களையும் நிபுணர்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

**ஆறாவது அவதாரம்: நிதிவளமிக்க அமைப்பு**

ஈராக்கில் ஐ எஸ் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து பெரும் நிதியை அவர்கள் வங்கிகளில் இருந்தும் வேறு நிறுவனங்களில் இருந்தும் தமதாக்கிக் கொண்டனர். சிரியாவிலும் ஈராக்கிலும் உள்ள பல எரிபொருள் உற்பத்தி நிலையங்களும் அவர்கள் வசமானது. மாதம் ஒன்றிற்கு நாற்பது மில்லியன் அமெரிக்க டொலர்களை அவர்கள் வருமானமாகப் பெறுகின்றார்கள். சிரிய அரச படைகள் கூட அவர்களிடம் இருந்தே தமக்குத் தேவையான எரிபொருளைப் பெறுகின்றன. இதில் முப்பது மில்லியன் அமைப்பிற்காகப் போர் புரிபவர்களுக்கும் பணி புரிபவர்களுக்கும் ஊதியமாக வழங்கப் படுகின்றது.



**ஏழாவது (ஐயப்படும்) அவதாரம்; இஸ்ரேலிய உளவாளிகள்**

ஐ எஸ் அமைப்பின் தலைவர் அபு பக்தர் அல் பக்தாதி ஒரு யூதப் பெற்றோர்க்குப் பிறந்தவர் என்றும் அவரது உண்மையான பெயர் எலியட் சைமன் என்றும் அமெரிக் காவில் இருந்து உளவு இரகசியங் களுடன் ரஷ்யாவிற்குத் தப்பிச் சென்றவரான எட்வேர்ட் ஸ்நோ டன் தெரிவித்ததாகச் சில செய்தி கள் தெரிவித்தன. ஈரனிய உளவுத் துறையும் இதையே நிழற்பட ஆதாரங்களுடன் தெரிவித்தது. கலிபா அரசர் என அழைக்கப் படும் அபு பக்தாதி என்னும் எலி யட் சைமன் அரபு பிரதேசங் களைக் கைப்பற்றி, பின்னர் அதை இஸ்ரேலுக்குக் கையளித்து ஒரு அகன்ற யூத அரசை அமைக்கத் திட்டமிட்டி ருப்பதாகக் குற்றம் சாட்டப் படுகின்றது. பலஸ்த்தீனி யர்களின் விடுதலைப் போராட்டத் திற்கோ ஹமாஸ் அமைப்பின் இஸ்ரே லுக்கு எதிரான தாக்குதல் களுக்கோ ஐ எஸ் அமைப்புத் துணை போவதில்லை.

**எட்டாவது அவதாரம்: இஸ்லாமிய தீவிரவாதிகளின் கொலைக்களம்**

அல் கெய்தா அமைப்பு போராளிகளைப் பயிற்றுவித்து மேற்கு நாடுகளுக்கு தாக்குதல்கள் நடத்த அனுப்பும் கொள்கையைக் கொண்டது. ஆனால் ஐ எஸ் அமைப்பு உலகெங்கும் உள்ள இஸ்லாமிய மார்க்கத்தில் தீவிர ஈடுபாடுடையவர்களை தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அழைத்து வைத்துள்ளது. இது மேற்கு நாடுகளில் இருந்து இஸ்லாமியத் தீவிரவாதிகளை அகற்றிச் சுத்தப்படுத்தியுள்ளது. அத்துடன் அத்தனை பேரும் விமானக் குண்டு வீச்சுக்களால் கொல்லப் படும் அபாயத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

**ஒன்பதாவது அவதாரம்: பல நாடுகளில் தீவிரவாதத் தாக்குதல்கள்.**

ஈராக்கிலும் சிரியாவிலும் அதிக கவனம் செலுத்தி வந்த ஐ எஸ் அமைப்பு திடீரென ரஷ்யப் பயணிகள் விமானத்தை வானில் வைத்துக் குண்டு வைத்து தகர்த் தும் லெபனானிலும் பிரான்ஸிலும் தீவிரவாதத் தாக்குதல்களை நடாத்தியும் உலகை உலுப்பியது. அது போதாது என ஐக்கிய அமெரிக்காவிலும் ஓர் இளம் தம்பதியினர் துப்பாக்கியால் சுட்டு பொதுமக்களைக் கொன்றவர்கள், ஐ எஸ் அமைப்பின் ஆதரவாளர் கள் என நம்பப்படுகின்றது.

**பத்தாவது அவதாரம்: உலகெங்கும் ஐ எஸ்**

தற்போது ஐ எஸ் அமைப்பின ருக்கு எதிரான தாக்குதல்கள் தீவிர

(22ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரஜனியின் வெள்ள நிவாரண நிதி

தமிழக வெள்ள நிவாரண நிதியாக நடிகர் ரஜினிகாந்த் ரூ 10 கோடி கொடுத்ததாக ஊடகங்களில் செய்திகள் வலம் வருகின்றன. இந்த விடயத்தில் உண்மை என்ன என்று விசாரித்தால், ரஜினி ரூ 10 கோடி கொடுத்ததாகச் சொல்லப்படுவது சிலரால் பரப்பப்பட்ட வதந்தி என்றும் தெரியவந்தது.

கடந்த வாரம் வெள்ள நிவாரண நிதியாக ரூ 10 லட்சத்தை, சென்னையை பெரும் மழை தாக்கியதற்கு முன்பு முதல்வர் ஜெயலலிதாவுக்கு அனுப்பி வைத்தார் ரஜினிகாந்த்.

அதன் பிறகு வெள்ளம் தாக்கிய பிறகு, கடந்த ஐந்து தினங்களாக நிவாரணப் பொருள்களை தனது ரசிகர் மன்றங்கள் மூலம் தமிழகம் முழுவதும் அனுப்பி வைத்து வருகிறார்.

இதுவரை 50க்கும் அதிகமான வாகனங்களில் நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளார் ரஜினி. இதனை அவரது மகள்கள் ஐஸ்வர்யா மற்றும் சவுந்தர்யா மேற்பார்வை செய்து வருகின்றனர்.

ரஜினியின் மருமகன் தனுஷும் இதில் பங்கேற்று வருகிறார். ரஜினி ரசிகர் மன்றத்தினருடன் தனுஷ் ரசிகர்களும் இணைந்து இந்த நிவாரணப் பொருள்களை விநியோகம் செய்து வருகின்றனர்.

இதுகுறித்து ரஜினி மன்ற நிர்வாகி ஒருவர் கூறுகையில், கடந்த ஐந்து தினங்களாக நூற்றுக்கணக்கான ரசிகர் மன்ற நிர்வாகிகள் மூலம் பாய், போர்வைகள், புதிய உடைகள், பால் பவுடர், சமையல் பொருள்கள், தண்ணீர் போத்தல்கள், மெழுகுவர்த்திகள், கொசு விரட்டிகள், வேட்டி, சேலைகள், அரிசி, நூடில்ஸ், பருப்பு என 25 வகைப் பொருள்களை விநியோகித்து வருகிறோம்.

சென்னை நகரம் முழுவதிலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொருள்களை விநியோகித்து விட்டோம். இப்போது கடலூர், தூத்துக்குடி, நாகை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

இதுவரை ரூ 5 கோடி மதிப்பிலான பொருள்களை நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகித்துள்ளோம். மேலும் 20 வாகனங்களில் நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட இருக்கின்றன. முதல்வரிடம் தனது மனைவி மூலம் மேலும் ரூ 10 கோடியை ரஜினி வழங்கியதாக வந்த செய்தி குறித்துக் கேட்டபோது, உண்மை தெரியாமல் சிலரால் பரப்பப்பட்டு வரும் வதந்தி அது, என்றார் அவர்.

# ஷாருக்கா...
# சேரும் ஆ...

திரையுலகில் இளம் நடிகர்களுடன் ஜோடி சேர்ந்து வெற்...
திரைப்பட பாட்ஷா ஷாருக்குடன் ஜோடியாக நடிக்கவுள்ளார்...
கௌரி ஷிண்டேவின் அடுத்த படத்தில் தான் இந்த வித்தியா...
மனைவியான கௌரி ஷிண்டே தனது புது படத்துக்கான தி...
2016 ஜனவரியில், படப்பிடிப்புத் தொடங்கும் என்று பட...
இந்தநிலையில், ஷாருக், ஆலியா ஜோடி பொருத்தமில்லாத ...
எழுந்தது. அதற்கு பதிலளிக்கும் விதமாக, ஷாருக், ஆலியா ...
அமையவிருப்பதாகவும் இதனை அனைவரும் விரும்புவார்...



# குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் பிரபல நடிகை

திரையுலகில் 80ஆம் ஆண்டுகளில் கொடிகட்டிப் பறந்த நடிகைகளில் திரையுலகில் 80ஆம் ஆண்டுகளில் கொடிகட்டிப் பறந்த நடிகைகளில் ஒருவர் ராணி முகர்ஜி. இவர் ஆதித்யா சோப்ராவை திருமணம் செய்துகொண்ட பிறகு சினிமாவில் இருந்து விலகி இருந்தார்.

இந்த நிலையில் இன்று காலை மும்பையில் உள்ள மருத்துவமனையில் இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. அந்தக் குழந்தைக்கு அதிரா என்று பெயரிட்டுள்ளனர்.

இவர்களுக்கு பல திரையுலக பிரபலங்கள் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.கர்ஜி. இவர் ஆதித்யா சோப்ராவை திருமணம் செய்துகொண்ட பிறகு சினிமாவில் இருந்து விலகி இருந்தார்.

இந்த நிலையில் இன்று காலை மும்பையில் உள்ள மருத்துவமனையில் இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. அந்தக் குழந்தைக்கு அதிரா என்று பெயரிட்டுள்ளனர்.

இவர்களுக்கு பல திரையுலக பிரபலங்கள் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.





# பொலிஸாக நடிக்க விரும்பும் அதர்வா

மறைந்த நடிகர் முரளியின் மகன் அதர்வா. பாணா காத்தாடி படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் முப்பொழுதும் உன்கற்பனைகள், பரதேசி, இரும்புக்குதிரை, சண்டிவீரன் போன்ற படங்களில் நடித்துள்ளார். இதில் பாலாவின் பரதேசி படம் அதர்வாவுக்கு நல்லதொரு பெயரை பெற்று தந்தது.

தற்போது ரவி அரசு இயக்கியுள்ள ஈட்டி என்ற படத்தில் நடித்திருக்கிறார். இதில் அவருக்கு ஜோடியாக ஸ்ரீதிவ்யா நடித்துள்ளார். தடகள வீரர் வேடத்தில் நடித்துள்ள அதர்வா, இதற்காக கடுமையாக உழைத்துள்ளார். தடகள வீரர் போன்று தோற்றம் கொண்டு வர உடற்பயிற்சி, தடகள வீரரிடம் பயிற்சி உள்ளிட்டவைகள் எல்லாம் மேற்கொண்டார். மேலும் கடுமையான உணவுக் கட்டுப்பாடுகளையும் மேற்கொண்டார்.

அதர்வா வளர்ந்து வரும் ஒரு நடிகர். இதுவரை காதல், ஆக்ஷன், பரதேசி போன்ற படம் என... ஒவ்வொரு படத்துக்கும் வித்தியாசம் காட்டி வருபவர். விரைவில் தனக்கு ஒரு முழு ஆக்ஷன் படத்தில், அதுவும் கம்பீரமான பொலிஸ் அதிகாரி வேடத்தில் நடிக்க விருப்பம் இருப்பதாக கூறியுள்ளார்.

ஈட்டி கடந்த வாரம் வெளியாக இருந்தது, ஆனால் சென்னையில் பெய்த கடுமையான மழையால் வெளியிட்டுத் திகதி தள்ளிப்போனது. இந்தப்படம் வருகிற கிழமை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னுடன் ஜோடி ...ஆலியா!

...ந்து வெற்றிகளைக் குவித்த ஆலியா பட் இப்போது ...வுள்ளார். இங்கிலிஷ் விங்கிலிஷ் படத்தை இயக்கிய ... வித்தியாச கூட்டணி. இயக்குநர் பால்கியின் ...க்கான தீவிர வேலைகளை தொடங்கியுள்ளார். ...ன்று படக்குழுவினர் தெரிவித்துள்ளனர். ...மில்லாத ஜோடி என்ற விமர்சனமும் திரையுலகில் ..., ஆலியா ஜோடி வித்தியசாமான கதைக்களத்தில் ...ரும்புவார்கள் என்றும் தகவல் வெளியிட்டுள்ளார்.



இளம் நடிகர்களின் கவர்ச்சிக்கு குறை வைக்காமல் தாராளமாக நடிப்பவர் ஸ்ருதி ஹாசன். ஒரு கவர்ச்சிக் குத்துப் பாடலுக்கே ரு. 1 கோடி வரை சம்பளம் தர சில தயாரிப்பாளர்கள் முன்வருகின்றனர். மலையாளத்தில் பிரபலமான பிரேமம் படத்தை தெலுங்கில் மஞ்சு பெயரில் மறுபதிப்புச் செய்கின்றனர்.
இந்தப்படத்தில் ரிச்சராக ஒப்பனை எதுவும் செய்யாமல் நடிக்கக் கேட்கப்பட்டது. அதற்கு ஸ்ருதி நடிக்க ஒப்புக்கொண்டார். இந்தப் படத்துக்காக சாதாரண கொட்டன் சேலை அணிந்து நகை எதுவும் அணியாமல் எளிமையான தோற்றத்தில் நடிக்கிறார். அதற்காக அவர் ஒத்திகையும் பார்த்தார். அவர் நடித்த ஒப்பனை இல்லாத காட்சிகளை புகைப்படமாக இணையத்தில் வெளியிட்டார் . நான் எப்படி இருக்கிறேன் என ரசிகர்களிடம் அவர் கேட்டிருக்கிறார்.

## எளிமையான தோற்றம் - ஸ்ருதிஹாசன்



# கணவர் தயாரிப்பில் நடிக்கும் கஜோல்!

இளம் நடிகர்களின் கவர்ச்சிக்கு குறை வைக்காமல் தாராளமாக நடிப்பவர் ஸ்ருதி ஹாசன். ஒரு கவர்ச்சிக் குத்துப் பாடலுக்கே ரு. 1 கோடி வரை சம்பளம் தர சில தயாரிப்பாளர்கள் முன்வருகின்றனர். மலையாளத்தில் பிரபலமான பிரேமம் படத்தை தெலுங்கில் மஞ்சு பெயரில் மறுபதிப்புச் செய்கின்றனர். இந்தப்படத்தில் ரிச்சராக ஒப்பனை எதுவும் செய்யாமல் நடிக்கக் கேட்கப்பட்டது. அதற்கு ஸ்ருதி நடிக்க ஒப்புக்கொண்டார். இந்தப் படத்துக்காக சாதாரண கொட்டன் சேலை அணிந்து நகை எதுவும் அணியாமல் எளிமையான தோற்றத்தில் நடிக்கிறார். அதற்காக அவர் ஒத்திகையும் பார்த்தார். அவர் நடித்த ஒப்பனை இல்லாத காட்சிகளை புகைப்படமாக இணையத்தில் வெளியிட்டார் . நான் எப்படி இருக்கிறேன் என ரசிகர்களிடம் அவர் கேட்டிருக்கிறார்.



# நயன்தாராவின் பிரத்தியே உதவி

மலையாள பத்திரிகை ஒன்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்காக, சகோதரிக்கு சாஸ்நேயம் (அன்புடன் சகோதரிகளுக்கு) என்ற அமைப்புட ஒன்றிணைந்து உதவி செய்து வருகிறார்கள்.

இந்த அமைப்பின் மூலமாக நயன்தாரா சென்னை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சில பிரத்யேக உதவிப் பொருள்களை அனுப்பி உள்ளார். உள்ளாடைகள், மாதவிடாய் காலங்களில் பயன்படுத்தப்படும் பொருள்கள் என 1000 பெண்களுக்கு உதவக்கூடிய பொருள்களாக அனுப்பியுள்ளனர்.

என்னதான் அரிசி, பருப்பு, போர்வைகள் என யார் எவ்வளவு பொருள்கள் கொடுத்தாலும் பெண்களால் வாய்விட்டு கேட்க முடியாத பொருள்கள் இவை தான். ஒரு பெண்ணாக நயன்தாரா சரியாக புரிந்துகொண்டு உதவியுள்ளார் என்றே கூற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவக் காதலால் பாழான வாழ்க்கை



பருவக் காதல் என்பது என்னதான் அந்த வயதில் வரும் எதிர்பாலின கவர்ச்சி என்று கூறினாலும், அந்த வயதில் அதை உண்மைக்காதல் என்றே நினைக்கத் தோன்றும். தமது எதிர்பாலாரை கவர எடுக்கும் சின்ன சின்ன முயற்சிகளும் அழகான பொக்கிஷங்களாக இருக்கும்.

இன்றும் அந்த சின்னச் சின்னச் சந்தோஷங்கள் நம் ஞாபகச் செடிகளில் பூக்களாய் மணம் வீசும் வரங்கள் பெற்றவை. ஆனால், இவையெல்லாம் ஒரு பக்கமிருக்க, பருவக் காதலானது அதன் எல்லைகளைத் தாண்டி பாரதூரமான பல விளைவுகளுக்கு காரணமாக அமைகின்றது.

குறிப்பாக, பல இளம் பெண்களின் வாழ்க்கைக்கு பாதியிலேயே முற்றுப்புள்ளி வைக்கும் துர்ப்பாக்கிய நிலைமையையும் உருவாக்கக்கூடியது.

அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக கடந்த காலங்களிலும் நாம் குற்றம் பகுதியில் சுட்டிக்காட்டியிருந்தோம். அந்த வகையில் இவ்வாரம் குற்றம் பகுதியில் இடம்பெறுவது பருவக் காதலினால் ஓர் இளம் பெண்ணின் வாழ்வில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் பற்றியதாகும்.

ஆம், அவள் தான் தாரகா. (பெயர் மாற்றப்பட்டுள்ளது) அநுராதபுர பிரதேசத்தில் மிகவும் வறிய குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையாக பிறந்தவள். தந்தை சுனில். (பெயர் மாற்றப்பட்டுள்ளது) கூலி வேலை செய்யும் சாதாரண தொழிலாளி. தாய் தமயந்தி.

தந்தை அன்றாடம் கிடைக்கும் கூலி வேலைகளை செய்து பணம் சம்பாதித்து வந்தார். ஆனால், அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தியில் ஒரு நாளை கொண்டு செல்வதென்பதே பெரும் போராட்டமாகவிருந்தது.

அதுமட்டுமின்றி, தந்தை சம்பாதிக்கும் பணத்தின் பெரும் பகுதி மதுபானக் கடைக்காரர்களின் வங்கிக் கணக்கு களையே நிரப்பியது. எனவே பணத்தை காரணம் காட்டி வீட்டுக்குள் அடிக்கடி சண்டை மூண்டது. இதனால் தமயந்தி வேலைக்கு செல்ல தீர்மானித்தாள். அதன்படி அநுராதபுரத்திலுள்ள பிரபல புடவைக்கடையொன்றுக்கு விற்பனையாளராக சென்றாள்.

அதன்பின், குடும்பத்தின் பொருளாதார நிலைமை ஓரளவுக்கு தீர்ந்த போதிலும் தமயந்தி தொடர்பாக மிகவும் மோசமான செய்திகளே குடும்பத்தவரின் காதுகளுக்கு எட்டின.

சுட்டெரிக்கும் வெயிலுக்கு மத்தியில் சீமெந்து, செங்கற்களுடன் போராடி வேலைபார்த்துவிட்டு வீட்டுக்கு செல்லும் பெரும்பாலான சந்தர்ப்பங்களிலெல்லாம் நண்பர்கள் தமயந்தி தொடர்பாக வெவ்வேறு விதமான கதைகளை சுனிலுக்கு கூறினார்கள்.

தமயந்திக்கும் புடவைக்கடையில் வேலை பார்க்கும் பிறிதொரு ஆணுக்கு மிடையில் இரகசிய தொடர்புகள் இருப்பதாக அவர்கள் கூறி கேலி செய்தார்கள். எனவே, இது நண்பர்கள் மத்தியில் சுனிலுக்கு தலைக்குனிவை ஏற்படுத்தியது.

வாழ்க்கையே வெறுமையானது போல் தனிமையில் புலம்பத் தொடங்கினான். அதுமட்டுமின்றி, தமயந்தியுடன் முரண்படவும் ஆரம்பித்தான்.

பிள்ளைகளுக்காக சரி நீ ஒழுங்காக இரு. உனக்கென்று குடும்பம், கணவன், பிள்ளைகள் இருக்கின்றார்கள் என்பதை மறந்து விடாதே. அப்படி இல்லையென்றால் நீ என்ன செய்தாலும் யாரும் கேட்கமாட்டார்கள் என்று பலமுறை தமயந்தியின் தவறை சுட்டிக்காட்டி அறிவுரை வழங்கினான். எனினும், தமயந்தி அதை சிறிதும் பொருட்படுத்தவில்லை.

இதனால் வீட்டில் நாளுக்கு நாள் பிரச்சினை அதிகரித்துக் கொண்டே சென்றது. இதன் விளைவாக சுனில் மூத்த மகனை பிக்குகள் கல்வி பயிலும் பிரிவெனவு வில் தங்கி கல்வி பயில அனுப்பி வைத்தான்.

இதனால் குடும்பத்துக் குள் இருந்து வந்த பிரச்சினை களுடன் மகள் தாரகா தனிமர மானாள். அதுமட்டு மின்றி, சில நாட்களில் தாரகாபருவ மடைந்தாள்.

தமயந்தி வீட்டில் இருக்கும் காலம் குறைவு என்பதால் தாரகாவை பார்த்துக் கொள்ளும் மிக பெரிய பொறுப்பு வேறொரு வீட்டில் வசிக்கும் அவளு டைய பாட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது.

தாரகா பருவமடைந்ததை தொடர்ந்து அவள் உடல் அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட தொடங்கின. அவள் வயதை மீறிய உடல் அமைப்புடன் அழகுடனும் கவர்ச்சியுடனும் காட்சியளித்தாள்.

இதனால் பல இளைஞர்களின் பார்வை தாரகாவை நோக்கியதாக விருந்தது. எனினும், அவ் இளைஞர்களி டம் மிகுந்த கட்டுக்கோப்புடன் தாரகா நடந்துகொண்டாள்.

ஆயினும், காலவோட்டத்தில் நிலைமை தலைகீழாக மாறத் தொடங் கியது. தாரகாவும் சுஜித் (பெயர் மாற்றப் பட்டுள்ளது) என்பவருக்குமிடையில் பருவக் காதல் பற்றிக்கொண்டது.

சுஜித் கல்விப் பொது தராதர சாதாரணதரப்பரீட்சை எழுதிவிட்டு, பெறுபேறுகள் போதாமையால் தாரகாவின் தந்தையுடன் கூலி வேலைகளுக்கு உதவியாக செல்பவன்.

அதுமட்டுமின்றி, தனது பெரும் பாலான இரவுப் பொழுதுகளை மதுபான போத்தல்களுடன் கழிப்பவன்.

எனினும், தாரகா சுஜித்தின் தீய பழக்கவழக்கங்கள் தொடர்பாக எதுவுமே அறிந்திருக்கவில்லை. இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டு சிறிது காலப்பகுதியிலேயே தாரகா மிகவும் கண்மூடித்தனமாக சுஜித்தை நம்பினாள்.

தனது பெற்றோரை விட சுஜித் மீது அதிகளவான அன்பையும் நம்பிக்கையையும் வைத்திருந்தாள். சுஜித்தும் அவள் நம்பிக்கைக்குரியவனைப் போலவே நடந்துகொண்டான்.

இதனிடையே, தாரகாவின் தாய் தமயந்தியும் அவளுடன் புடவைக்கடையில் தொழில் பார்க்கும் பிறிதொரு ஆணும் உல்லாசமாக செல்வதை தனது இரு கண்களாலும் கண்டு ஆத்திரமுற்ற சுனில் தமயந்தி வீடு வரும் வரை காத்திருந்தார்.

எனினும், தமயந்தி வீட்டுக்கு

**- வசந்தா அருள்ரட்ணம்**

வருவதற்கு அஞ்சினாள். அதன் பின்னர் வீட்டுக்கு வரவே இல்லை.

அதன்பிறகு ஒரு வருடம் கழித்து சுனிலும் மறுவிவாகம் செய்துகொண் டார். எனவே, சிற்றன்னை வீட்டுக்கு வர தாரகாவின் நிலைமை இன்னும் மோசமாகியது. சதா தாரகாவை குறை கூறி திட்டிக்கொண்டே இருப்பாள்.

எனவே, சிற்றன்னையின் கொடுமை தாங்க முடியாது தனது பாட்டி தங்கியிருந்த சிறிய வீட்டை நோக்கி தாரகா சென்றாள். பாட்டியும் தனக்கு தெரிந்த சிறு சிறு தொழிலுக்குச் சென்று தன்னால் முடிந்த அளவு தாரகாவை பார்த்துக்கொண்டார்.

அதுமட்டுமின்றி, மகள் தாரகா பாட்டியின் வீட்டுக்கு வந்தவுடன் சுனிலால் தனது இரண்டாவது மனைவியின் பேச்சை மீறி தாரகாவுக்கு எவ்வித உதவியும் செய்யமுடியவில்லை.

மேலும், தாய் தந்தை இருவரும் வெவ்வேறு திசையில் வெவ்வேறு விதமான வாழ்க்கை வாழ்வதால் நண்பர்களின் கேலிகளுக்கும், கிண்டல்களுக்கும் மத்தியில் தாரகாவால் பாடசாலைக்கும் செல்ல முடியவில்லை.

இதனால் பாடசாலை கல்வியையும் தாரகா இடைநிறுத்தி விட்டு வீட்டில் இருந்தாள். இச்சந்தர்ப்பத்தில் தான் தாரகாவுக் கும் சுஜித்துக்கும் இடையிலான நெருக்கம் இன்னும் அதிகமானது.

சுஜித் பாட்டி வீட்டிலில்லாத பல சந்தர்ப்பங்களில் அடிக்கடி வீட்டுக்கு வந்து போவான். தாரகாவின் செலவுக்கும் சுஜித் பணம் கொடுப்பான். எனினும், இதை பாட்டி சிறிதும் விரும்பவில்லை.

பலமுறை இது தொடர்பாக தாரகாவை கண்டித்தார். எனினும், பருவக் காதல் தாரகாவின் கண்களை மறைத்தது. பாட்டி சொல்வதை அவள் சிறிதும் பொருட்படுத்தவில்லை.. இறுதியில் பாட்டியை ஏமாற்றிவிட்டு சுஜித்துடன் வீட்டை விட்டுச் சென்றுவிட்டாள்.

இது பற்றி தாரகா கூறுகையில், அப்போது எனக்கு 15 வயது இருக்கும். அப்பாவிடமிருந்து எனக்கு எந்த உதவியும் கிடைக்காததால் சுஜித் அண்ணா எனக்கு செலவுக்கு பணம் தருவார். அடிக்கடி வீட்டுக்கும் வந்து போவார்.

இதை பாட்டி எப்படியோ அறிந்து கொண்டார். அதன்பின் பலமுறை இந்த தொடர்பை துண்டித்து விடுமாறு அவர் எனக்கு அறிவுரை வழங்கினார்.

இருந்தும், அவர் சொல்வதை நான் சிறிதும் காதில் போட்டுக்கொள்ள வில்லை. சுஜித் அண்ணா தான் எனக்கு உலகம் என்று நினைத்து அவருடன் சென்றேன். எனினும் அவர் என்னை ஏமாற்றிவிட்டார்.

நாங்கள் இருவரும் அநுராதபுரத்திலிருந்து புறப்பட்டு கட்டுநாயக்க பிரதேசத்திற்கு சென்றோம். அங்கு சுஜித் அண்ணாவின் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கினோம். பின் நாங்கள் அங்குள்ள ஆடைத் தொழிற்சாலையில் வேலைக்கு செல்ல தயாராகினோம்.

அப்போது சுஜித் அண்ணாவுக்கு அங்கு உடனடியாகவே வேலை கிடைத்தது. எனினும், நான் 18 வயதை பூர்த்தியடையாததால் எனக்கு அங்கு வேலைக்கு செல்வது சிரமமாக விருந்தது.

எனவே, மருதானையிலுள்ள சுஜித் அண்ணாவின் நண்பர் ஒருவர் சில போலி ஆவணங்களை தயாரித்து அங்கு என்னை வேலைக்கு சேர்த்தார். நான் வயதை விட தோற்றத்தில் பெரியவளாய்

( 22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்



## அழகு எதுவரை?

அழகு எதுவரை
அளவிடமுடியாது நீண்டு கிடக்கும்
ஆழம் மிகுந்த நீலக் கடல் அழகுதான்
சுனாமிக் கரங்களால்
உயிரினங்களை கவராதவரை....

வான்சிறை விடுத்து விடுதலையாகி
தூறலாக விழும் மழை அழகுதான்
வெள்ளமென உருவெடுத்து
உயிரினங்களை
அடித்துச் செல்லாத வரை...

மேக உரசலில் ஆகாயம் வெட்டும்
வெளிச்சக் கற்றை மின்னல் அழகுதான்
மின்சாரமென பாய்ந்து
உயிரினங்களை கரியாக்காதவரை...

சுனை ஊறும் மலையும்
பசுமை போர்த்திய குன்றும் அழகுதான்
மணலாய் உதிர்ந்து
உயிரினங்களை சேதப்படுத்தாதவரை..

கரையிரண்டின் கட்டுப்பாட்டில்
சலனமற்று ஓடும் ஆறு அழகுதான்
புதைமணலை மறைத்துவைத்து
பாதம்பதித்தவரை விழுங்காதவரை...

நீர்நிலைகள் மலர்செடிகள் தழுவி
தென்றலாக வீசிடும் காற்று அழகுதான்
மொத்தமாக கைகோர்த்து
புயலாக மாறி அழித்துச் செல்லாதவரை..

அன்பும் நேசமும் அகத்தில் வைத்து
பிறருக்காக வாழும் மனிதன் அழகுதான்
நிலைமாறி வன்மம் வளர்த்து
மனித நேயம் தொலைக்காதவரை...

ரூபின்



# கரும்பில் உள்ள மருத்துவ குணங்கள்..!

### மஞ்சள் காமாலை

கரும்புச் சாற்றில் மஞ்சள் காமாலையைக் குணப்படுத்தும் மருத்துவப் பொருள் நிறைந்துள்ளது. பொதுவாக மஞ்சள் காமாலை வந்தால், சருமம் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இதற்குக் காரணம், பிலிரூபின் இரத்தத்தில் கலந்திருப்பதே ஆகும். அதுமட்டுமின்றி மோசமான கல்லீரல் செயல்பாடுகள் மற்றும் பித்த நாளங்களில் அடைப்புப் போன்றவைகளும் மஞ்சள் காமாலையை உண்டாக்கும். எனவே மஞ்சள் காமாலையிலிருந்து உடனே குணமாவதற்கு, இரண்டு குவளை கரும்புச் சாற்றுடன் எலுமிச்சை மற்றும் உப்புச் சேர்த்துக் குடிக்க வேண்டும்.

### தொற்றுநோய்கள்

உடலில் உள்ள சிறுநீரகக் குழாய், பிறப்புறுப்பு, செரிமான மண்டலக் குழாய் போன்ற பல இடங்களில் தொற்று நோய்களினால் எரிச்சல், அரிப்பு போன்றவை ஏற்படும். இத்தகையவற்றை சரிசெய்ய ஒரு குவளை கரும்புச் சாறு குடித்தால், அவை சரியாகிவிடும்.

### சிறுநீரகக் கற்கள்

கரும்பின் நன்மைகளிலேயே முக்கியமான ஒன்று என்றால் அது சிறுநீரகக் கற்களை குணமாக்குவது தான். பொதுவாக இந்தக் கற்கள் உடலில் ஏற்படும் வறட்சியினால் ஏற்படும். அதற்காகத் தான் அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். ஏனெனில் அவை அந்தக் கற்களை உடைத்து வெளியேற்றி விடும். என்வே தண்ணீர் மட்டுமின்றி, கரும்புச் சாற்றையும் குடித்தால், அந்தக் கற்கள் எளிதில் உடைந்து கரைந்துவிடும்.

### நீரிழிவு கரும்பு

இனிப்பாக இருப்பதால், நீரிழிவு நோயாளிகள் சாப்பிடப் பயப்படுவார்கள். ஆனால் உண்மையில் அதில் இருக்கும் இனிப்பானது இரத்தத்தில் உள்ள குளுக்கோஸின் அளவை சீராக வைக்கும். எனவே உடல் எடையை குறைக்க விரும்புவோர் அல்லது சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள், இதனை எந்த ஒரு அச்சமுமின்றி சாப்பிடலாம்.

### ஊட்டச்சத்துக்கள்

கரும்பில் விற்றமின் மற்றும் கனிமச்சத்துக்கள் அதிகம் உள்ளது. அதிலும் பொஸ்பரஸ், இரும்புச்சத்து, பொட்டாசியம், கல்சியம் மற்றும் மக்னீசியம் போன்றவை அதிக அளவில் இருப்பதால், உடலில் எந்த ஒரு ஊட்டச்சத்து குறைபாடுமின்றி, உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.

### சளி, இருமல் மற்றும் தொண்டை வலி

நிறைய பேர் இருமல், சளி அல்லது தொண்டை வலி இருந்தால், கரும்பை நிச்சயம் சாப்பிடக் கூடாது என்று சொல்வார்கள். ஆனால் உண்மையில் அந்த மாதிரியான எண்ணம் தவறானது. இந்த மாதிரியான பிரச்சினைக்குச் சிறந்தது என்று சொன்னால், அது கரும்பு தான்.

### புற்றுநோய்

கரும்பில் இயற்கையாக உள்ள அல்கலைன் என்னும் பொருள், புற்றுநோயை குணப்படுத்தும் தன்மையுடையது. குறிப்பாக பெருங்குடல், நுரையீரல் அல்லது மார்பக புற்றுநோய் போன்றவற்றுக்குச் சிறந்தது.

### நீர் வறட்சி

நிறைய மக்கள் அதிக அளவு தண்ணீர் குடிப்பதை விரும்ப மாட்டார்கள். எனவே அத்தகையவர்களுக்கு உடலில் ஏற்படும் வறட்சிய்யை நீக்க கரும்புச் சாற்றை குடிக்கலாம். மேலும் கோடை காலத்தில் உடலானது அதிக சூடாக இருக்கும். எ்னவே உடல் வெப்பத்தை தணிப்பதற்கு தினமும் ஒரு குவளை கரும்புச் சாறு குடிப்பது நல்லது.

## அரிவையொன்று பிறந்தாள்

விண்ணைத் தொடுமழகு
மண்ணில் பிறந்த
பேரழகியவள்
இடர்கள் தனை
களைந்தே இணைந்தாள்
இதயமத்தியிலே

மன்மத மச்சம்
என்னிடம் உண்டு
அது தான் அவளும்
நடந்தாள்
இதயப் பறவை
சிறகடிப்பதால்
மனதில் புதுயுகம்
சுமக்கிறது.

காதல் கவிதை
எழுதச் சொல்லி
காலம் கூட
எனை அழைக்கிறது

கன்னித்தமிழ்
மங்கை மோகம்
கண்ட பின்பு
மனது வேர்க்கும்

இளமை எனும்
ஊஞ்சலிலே
நடக்குது காதல் மோகம்
நடனமிட்ட மங்கையவளால்
எனது வாழ்வில்
நர்த்தனங்கள்

ஆடுவதும்
ஆட்டுவிப்பதும்
அவனின் செயல்
வாழ்வதும் வீழ்வதும்
அவரவர் விதியின் செயல்

வே. வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் மனதில் இடம்பிடிக்குமா 'ஈட்டி'




பொலிஸ் அதிகாரியான ஜெயப்பிரகாஷ் தஞ்சாவூரில் தனது மனைவி, மகன் அதர்வா மற்றும் மகளுடன் வாழ்ந்து வருகிறார்.

அதர்வாவின் உடம்பில் ஒரு குண்டூசி குத்தினால்கூட ரத்தம் நிற்காமல் செல்லும். கொஞ்சம் ஆழமாக குத்தினால் அவரின் உயிருக்கே ஆபத்தாக அமையும். இதை அதர்வா சிறு வயதில் இருக்கும் போதே தெரிந்து கொண்ட ஜெயப் பிரகாஷ் அவரை கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகிறார்.

விளையாட்டில் அதிக கவனம் செலுத்தினால் அதர்வாவின் பிரச்சினையை ஓரளவு சரிசெய்யலாம் என்று அவரை விளையாட்டில் அதிக ஆர்வம் காட்ட வைக்கிறார் ஜெயப்பிரகாஷ். கல்லூரியில் படிக்கும் அதர்வா, தடகளப் பயிற்சியாளர் ஆடுகளம் நரேன் மூலம் தடகள வீரராக உருவெடுக்கிறார். அதன்பின்னர் விளையாட்டு ஒதுக்கீட்டின் மூலம் அதர்வாவை பொலிஸ் அதிகாரியாக்க முயற்சிக்கிறார் ஜெயப்பிரகாஷ்.

இந்த நிலையில், அதர்வாவுக்கு தவறுதலாக வந்த அழைப்பு மூலம் சென்னையில் இருக்கும் ஸ்ரீதிவ்யாவுடன் பழக்கம் ஏற்படுகிறது. இந்தப் பழக்கம் நாளடைவில் காதலாக மாறுகிறது. இந்தச் சமயத்தில் தடகள இறுதி போட்டிக்காக சென்னைக்கு வருகிறார் அதர்வா. சென்னை வந்தவுடன் ஸ்ரீதிவ்யாவை சந்திக்கச் செல்கிறார் அதர்வா.

இதற்கிடையில், ஸ்ரீதிவ்யாவின் அண்ணனான திருமுருகனுக்கும் கள்ள நோட்டு கும்பலுக்கும் விரோதம் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினையில் ஸ்ரீதிவ்யாவுக்காக அதர்வா தலையிடுகிறார். இதனால் கள்ள நோட்டுக் கும்பல் அதர்வாவைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்கிறார்கள். மேலும் அதர்வாவுக்கு சிறு காயம் பட்டால்கூட உயிரிழந்து விடுவான் என்பதை அந்தக் கும்பல் தெரிந்து கொள்கிறது.

இறுதியில் அதர்வா அந்தக் கும்பலிடம் தப்பித்துத் திட்டமிட்டபடி தடகளப் போட்டியில் கலந்துக் கொண்டாரா? அவரது தந்தையின் இலட்சியம் நிறைவேறியதா? என்பதே மீதிக்கதை.

படத்தின் நாயகனாக நடித்திருக்கும் அதர்வா யதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். தடகள வீரருக்கு உண்டான உடலமைப்புக்காக அதிகமாக உழைத்திருக்கிறார் என்று தெளிவாகத் தெரிகிறது. இவருடைய உழைப்புக்குப் பலன் கிடைத்திருக்கிறது என்றே சொல்லலாம்.

அப்பாவின் இலட்சியத்துக்காக போராடுவது, காதலிக்காக கள்ள நோட்டு கும்பலை எதிர்ப்பது எனச் சிறப்பாக நடித்திருக்கிறார்.

நாயகியாக நடித்திருக்கும் ஸ்ரீதிவ்யா ஆர்ப்பாட்டமில்லாத நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். பொறுப்பான அப்பாவாக ஜெயப்பிரகாஷ், ஊக்கம் கொடுக்கும் பயிற்சியாளராக ஆடுகளம் நரேன் ஆகியோர் கொடுத்த கதாபாத்திரத்தை செவ்வனே செய்திருக்கிறார்கள்.

விளையாட்டை மையப்படுத்தி பல படங்கள் வெளியாகியிருந்தாலும், இந்தப் படத்தை சற்று வித்தியாசமான கோணத்தில் இயக்கி சபாஷ் பெற்றிருக்கிறார் இயக்குநர் ரவி அரசு. சிறந்த கதாபாத்திரங் களைத் தேர்வு செய்து அவர்களிட மிருந்து அழகான நடிப்பை வாங்கியிருக்கிறார். படம் முழுக்க ரசிக்க வைத்த இயக்குநர் திரைக்கதையை சிறிது சுருக்கியிருந்தால் கூடுதலாக ரசித்திருக்கலாம்.



ஜி.வி. பிரகாஷ் இசையில் பாடல்கள் ரசிக்கும் விதம். பின்னணி இசையை சிறப்பாகக் கொடுத்திருக்கிறார். சரவணன் அபிமன்யுவின் ஒளிப்பதிவு படத்துக்குப் பலமாக அமைந்திருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு உடற்பயிற்சி



உடற்பயிற்சி பெண்களுக்கு, நிச்சயமாக அழகான உடலமைப்பை வழங்குகின்றது என்றே சொல்லலாம். நாம் அழகாகவே இல்லை. குண்டாக வேறு இருக்கிறோம். நம்மால் அழகாகத் தோற்றம் அளிக்க முடியாது என்றெல்லாம் நினைத்து விடாதீர்கள், எப்போதுமே நேர்மறையாகச் சிந்தித்தால்தான் எல்லாவற்றிலும் நல்ல பலனை எதிர்பார்க்க முடியும்.

நம் உடலில் எங்கெங்கு குறையிருக்கோ அதனை நாம் நமது உடற்பயிற்சியின் மூலமும், மிதமான, அதே சமயம் நாகரிகமான ஒப்பனையின் மூலமும் நிவர்த்தி செய்ய இயலும்.

உடற்பயிற்சி செய்வதனால் அலைபாய்கிற மனதை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். மற்றும் இரத்த ஓட்டம் சீராகி, புத்துணர்வு கிடைக்கிறது. உடல் கட்டுக்கோப்பாக ஆகும். இந்த மகிழ்ச்சி தன்னம்பிக்கையை அளித்து அழகூட்டுகிறது.

வியர்வை வெளிப்படுகிற மாதிரி பயிற்சி செய்தாலே முகம் பொலிவு பெற ஆரம்பித்து விடும்.

பயிற்சி செய்து விட்டு ,பின்பு விட்டுவிட்டால் குண்டுப் பெண்மணி ஆகிவிடுவோம் என்று பயப்படும் அவசியமே இல்லை. என்ன இரண்டு கிலோ அதிகமாகும் அவ்வளவுதான். மீண்டும் நீங்கள் தொடர்ந்தால் அது சரியாகி விடும்.



நமது உடல் வாகு, முகத்துக்கேற்ற தலையலங்காரம் ஒப்பனையில் சிறிது அக்கறை இருந்தாலே போதும் நாமும் அழகிதான். உதட்டுச்சாயக்கலர், முகப்பவுடர் போன்றவை தேர்ந்தெடுப்பதில் கவனம் தேவை.

உடையைப் பொறுத்தவரை ஒவ்வொருவருக்குமே ஒரு தனிதன்மை இருப்பது அவசியம். அனைவருமே ஆடை வாங்குகிறார்கள். அணிந்து கொள்கிறார்கள். ஆனால் ஒரு சிலரே ஆயிரம் பேருக்கு நடுவிலும் அழகு தேவதையாக வலம் வருவார்கள். காரணம் அவர்கள் அணிகின்ற ஆடைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விதமாகவும், அழகாகவும் அணிவது தான். இதுதான் அவர்களது தனித்திறமை ஆகும். அந்த அலங்காரத் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். எதற்குமே முயற்சிதான் காரணமாகிறது. .

உயரமானவர்களுக்கு கட்டம் போட்ட வடிவிலானதும் , பெரிய பூக்களை உடையதுமான ஆடைகள் அழகான தோற்றத்தையும், மிதமான உயரமானவர்களுக்கு நீண்டகோடுகள் போட்ட ஆடைகளைத் அணிந்தால் உயரமாக இருப்பது போன்ற தோற்றத்தையும் தரும்.

உயரம் குறைந்தவர்களுக்கு நீளக்கோடு போட்டதும், சிறு சிறு பூக்களை உடைய ஆடையே அவர்களை உயரமாகக் காண்பிக்கும். குறுக்கும் நெடுக்குமாக கோடுகள் போட்டதற்கு முன்னுரிமை அளித்தல் அவர்கள் மிகவும் குள்ளமாகவும், குண்டாகவும் இருப்பது போன்ற தோற்றத்தை அளிக்கும்.

நிற விஷயத்திலும் அப்படியே. நிறமாக இருப்பவர்களுக்கு மெல்லிய நிறம் ,கடுமையான நிறம் என்று எந்தக் கலர் ஆடையை வேண்டுமானாலும் அணியலாம்.


மாநிறமாகவும், கறுப்பாகவும் உள்ளவர்கள் நிற விடயத்தில் கொஞ்சம் கவனம் வைக்க வேண்டும். மிகவும் கடும் நிறத்தையோ , மிகவும் இளநிறத்தையோ தெரிவு செய்தல் கூடாது. இள நிறமாக அணிந்தால் அவர்களும் நல்ல நிறமாக தோற்றம் அளிக்க இயலும்.

உயரமானவர்கள் மெல்லிய செருப்பையும், குள்ளமானவர்கள் ஓரளவு குதி உள்ள செருப்பையும் அணியலாம். அதிகப்படியான குதி முதுகு வலி, இடுப்பு வலி போன்ற பக்க விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

இவ்வாறு பெண்கள் உடற்பயிற்சியின் மூலமும் , தமக்கென தாமே வகுத்துள்ள சில தனித்தன்மைகள் மூலமும் தமது வாழ்க்கையை இன்பமயமாக்கிக் கொள்ளலாம்.

# தக்காளி பூரி

### தேவையான பொருள்கள்



1. கோதுமை மா - 250 கிராம்
2. தக்காளி - 4
3. மிளகாய்த் தூள் - 1 தேக்கரண்டி
4. நெய் - 1 தேக்கரண்டி
5. எண்ணெய் - தேவையான அளவு
6. உப்பு - தேவையான அளவு.

## செய்முறை

1. தக்காளியைக் கொதிக்கும் நீரில் போட்டுச் சிறிது நேரம் கழித்து அதன் தோலுரித்து விடவும்.
2. தோலுரிக்கப்பட்ட தக்காளியை விழுதாக அரைக்கவும்.
3. கோதுமை மாவுடன், தக்காளி விழுது, மிளகாய்த்தூள் நெய், உப்பு சேர்த்து கெட்டியாகப் பிசையவும்.
4. பிசைந்த மாவைச் சிறுசிறு உருண்டைகளாக்கி வைக்கவும்.
5. மாவு உருண்டையைப் பூரியாகத் தேய்த்து வைக்கவும்.
6. வாணலியில் எண்ணெய்யைக் காய வைத்து, எண்ணெய்க் காய்ந்ததும் பூரிகளாகப் பொறித்து எடுக்கவும்.

# முகம் பொலிவு பெற...



- வாழைப்பழத்தை மசித்து பால் கலந்து முகத்தில் பூசி, சில நிமிடங்கள் கழித்து தண்ணீரால் கழுவினால், முகம் பொலிவுடன் காணப்படும்.
- பாதாம் பருப்பு, தேன் மற்றும் தயிர் ஆகியவற்றை சம அளவு எடுத்து முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால், முகத்தின் பொலிவு அதிகரிக்கும்.
- தேன் மற்றும் பால் கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினாலும், முகம் பொலிவுடன் காணப்படும்.
- கோதுமை தவிட்டுடன் பால் கலந்து கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தடவி வர சிறிது நாள்களில் கரும்புள்ளிகள் மறைந்து விடும்.
- தேன் மூன்று மேசைக்கரண்டி எடுத்து கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தேய்த்து, சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரால் கழுவினால் கரும்புள்ளிகள் மறையும்.
- முருங்கை இலைச்சாறு, எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து தடவினால், கரும்புள்ளிகள் நீங்கும். அதே போல் பப்பாளி பழத்தை மசித்து தேன் கலந்து முகத்தில் தடவினாலும், நல்ல பலன் கிடைக்கும்.
- ரோஜா இதழ் மற்றும் பாதாம் பருப்பை அரைத்து முகத்தில் தேய்த்து, சிறிது நேரம் கழித்து கழுவி வர, கரும்புள்ளிகள் மறையும்.
- கடலை எண்ணெய் மற்றும் எலுமிச்சம் பழச்சாறு சம அளவு கலந்து அவற்றை கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தேய்த்து 15 நிமிடங்கள் கழித்து கழுவலாம்.
- உருளைக்கிழங்குச் சாறை தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவினால், கரும்புள்ளிகள் மறையும்.
- வெள்ளரிச்சாறு, எலுமிச்சை பழச்சாறு ஆகியவைகளை சம அளவில் கலந்து முகத்திலுள்ள கரும்புள்ளிகள் மீது தேய்த்து வந்தால் கரும்புள்ளிகள் போய் விடும்.




- முட்டையின் வெள்ளைக் கருவை நன்றாக அடித்து, முகத்தில் தேய்த்து காய்ந்ததும், அவற்றின் மீது தண்ணீர் தடவி தேய்த்தால், கரும்புள்ளிகள் நீங்கும்.
- முட்டைகோசுடன் பன்னீர் ரோஜாவை மசித்து அதில் பால் மற்றும் தேனை கலந்து முகத்தில் தேய்த்து சில நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் ஒரு முறை செய்தால், கரும்புள்ளிகள் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மழைக்கால நோய்களைத் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

குழந்தைகளைக் குளிக்கவைத்து நன்றாக உலர்ந்த துணியில் சுத்தமாகத் துடைக்க வேண்டும். மழைக்காலத்தில் குழந்தைகளை அடிக்கடி தலையில் குளிப்பாட்டுவதைத் தவிர்க்கவும். இது காது சார்ந்த பிரச்னைகளை உருவாக்கலாம்.

குளிருக்கு 'ஸ்வெட்டர்' அணியும் போது குழந்தைகளின் காதுகளையும் சேர்த்து மூடும் வகையில் தொப்பி அணிவிக்கவும். இதனால், காதுவலி, சளி பிடித்தல் வராது.

டெங்குக் கொசுக்கள் பகலில்தான் கடிக்கும் என்பதால் கொசுக்கடி மருந்துகளை பகலிலும் குழந்தைகளுக்கு தடவுவது நல்லது. முகம் தவிர்த்து கைகள், கால்கள் முற்றிலும் தடவ வேண்டும். கொசுக்கள் இல்லாத பாதுகாப்பான இடங்களில் குழந்தைகளைப் பாதுகாப்பது நல்லது.

குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டால், மிதமான உணவுகளை வழங்குவது நல்லது. மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், உடனடியாக ரத்தப் பரிசோதனை செய்வது அவசியம்.

காய்ச்சல் உட்பட எந்த உடல் உபாதை இருந்தாலும் தேவையான அளவு தண்ணீர் அருந்துவது மிக மிக அவசியம். குழந்தைகளின் நாக்கு ஈரப்பதத்துடன் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுதல் நன்று.

**சித்த மருத்துவர் கு.சிவராமன் சொல்லும் மழைக்கால டிப்ஸ்...**

தண்ணீர் மூலம்தான் பல நோய்கள் பரவுகின்றன. எனவே, தண்ணீரைக் கொதிக்கவைத்து, ஆறிய பின்பு பயன்படுத்துவது சிறந்தது. கொதிக்கவைப்பது என்றால், லேசாக சுட வைக்காமல், குமிழிகள் வரும் வரை கொதிக்கவிட வேண்டும். கொதிக்கவைத்து ஆற வைத்த பின்பு குடிக்கும் பொழுதுகளிலும் லேசாக சுடவைப்பது நல்லது.

தைபொய்ட், மலேரியா, மஞ்சள் காமாலை, வயிற்றுப்போக்கு, டெங்கு போன்ற வியாதிகள் மழைக்காலங்களில் மிக சுலபமாக வரக்கூடியவை. எனவே இந்த வியாதிகளின் அறிகுறிகளை அறிந்து வைத்திருக்க வேண்டும். காய்ச்சல் படிப்படியாகக் கூடுகிறது என்றால், அது தைபொய்ட் காய்ச்சலாக இருக்க வாய்ப்புண்டு. தீவிரத் தலைவலியுடன் உடல் எல்லாம் சிவந்து திட்டுத்திட்டாக உடலில் தடிப்புகள் வந்தால் விஷக் காய்ச்சலாகவோ வைரஸ் காய்ச்சலாக இருக்கலாம். கண் மஞ்சள் நிறமாகி வயிற்று வலியுடன் வரும் காய்ச்சல் காமாலைக் காய்ச்சலாக இருக்கலாம். வயிற்றுப் பகுதியில் வலது, அல்லது இடது பக்க விலா எலும்புக்கு கீழ் வலியோ வீக்கமோ இருந்தால், காமாலை அறிகுறியாக இருக்கலாம். குளிர்க் காய்ச்சல் இருக்கையில், சிறுநீர் போகும்போது எரிச்சல் இருந்தால், சிறுநீரகப் பாதையில் வரும் தொற்றாக இருக்கலாம். ஒவ்வொரு முறை மலம் கழியும்போதும் வலியுடன் கழிவதோ, மலம் கட்டிப்பட்டுப் போகாமல் நீர்த்துப்போவது, மலத்தில் சளி சேர்ந்து போவது எல்லாம் வயிறு சார்ந்த தொற்றாக இருக்கலாம். இது போன்ற அறிகுறிகள் இருந்தால், மருத்துவரைச் சந்தித்து ஆலோசனை பெறுவது அவசியம்.

வீட்டு உணவு உண்ணும்போது, சூடாக அவ்வப்போது தயாரித்துச் சாப்பிடுவதே நல்லது. எங்கெல்லாம் காரம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் மிளகாய் வற்றலுக்குப் பதிலாக மிளகு சேர்த்துக்கொள்வது நல்லது. ரசம், மிகவும் சிறப்பான உணவு. அதில் அடங்கியிருக்கும் மிளகு, இஞ்சி, சீரகம், பூண்டு எல்லாம் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கக்கூடியவை. அதே ரசத்தில் வீட்டில் துளசி இருப்பின் சேர்த்துக்கொள்ளலாம். தூதுவளைக் கீரை இருந்தால், தூதுவளை சேர்த்துக் கொள்ளலாம். குருமா போன்ற உணவு வகை செய்யும்போது நட்சத்திர வடிவில் இருக்கும் அண்ணாச்சிப் பூவை (சாதாரணமாக பிரியாணியில் சேர்க்கக்கூடிய பொருள்) நுணுக்கி சேர்த்துக் கொள்ளலாம். இவை எல்லாம் வைரஸ் காய்ச்சல் வராமல் நம்முடைய நோய் எதிர்ப்பு ஆற்றலை கூட்டக்கூடியவை. நெற்றியில் நீர் கோத்து சளி பிடித்திருந்தால் சுக்கு பத்து போடலாம்.

டெங்கு உட்பட எல்லா விதமான வைரஸ் காய்ச்சல்களுக்கும் கைகண்ட மருந்து நிலவேம்புக் கஷாயம். அதை வாங்கி வீட்டில் வைத்துக் கொண்டு, இரண்டு தேக்கரண்டி பொடியை இரண்டு குவளை (டம்ளர்) தண்ணீருடன் சேர்த்து அரைக் குவளையாக காய்ச்சிக்கொள்ள வேண்டும். ஒருவருக்கு 60 மில்லி வீதம் குடிக்கக் கொடுக்கலாம். சிறிய குழந்தைகளுக்கு 30 மில்லி வீதம் கொடுக்கலாம்.

மிளகைப் பொடி செய்து, தேன் சேர்த்து, இளம் சூடாக்கும்போது லேசாக தேன் பொங்கும். அதைத் தண்ணீரில் கலந்து இரவில் குழந்தைகளுக்குக் கொடுத்தால், மழைக் காலத்தில் வரக்கூடிய சளி இருமல், நெஞ்சில் கபம் அடைப்பது எல்லாம் உடனே சரியாகும்.

வீட்டில் உள்ள 10 வயது, 12 வயதுக் குழந்தைகளுக்கு, ஒரு கைப்பிடி துளசி, இரண்டு வெற்றிலை, நான்கு மிளகு, கற்பூரவள்ளி இலை, எல்லாவற்றையும் சேர்த்து கஷாயம் செய்து அரை டம்ளர் குடிக்கக் கொடுக்கலாம். மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகள் இருந்தால், துளசி, கற்பூரவள்ளி போன்றவற்றை இடித்துச் சாறெடுத்து, தேன் சேர்த்து இளம் சூடாக்கிக் கொடுக்கலாம்.

வீட்டில் சிற்றரத்தை (Galangal root) பொடியை வாங்கி வைத்துக் கொண்டு, தேனுடன் அரை தேக்கரண்டி பொடி சேர்த்துச் சாப்பிட்டால் மூட்டுவலியும் போகும், சளி இருமலுக்கும் நல்லது. அமுக்குறாங்கிழங்குப் பொடியை அரை தேக்கரண்டி காலையும் மாலையும் சாப்பாட்டுக்கு முன் எடுத்துக்கொள்வதும் மூட்டுவலிக்கு நல்லது.

மழை நேரத்தில் தரையின் குளிர்ச்சியில் படுத்து உறங்கக் கூடாது. உடல் வலி, மூட்டு, கழுத்து, இடுப்பு பகுதிகளில் வலியைக் கொடுக்கும். எனவே தரையில் பாய், மெத்தை போன்றவற்றை விரித்துப் படுப்பது நல்லது. வயதானவர்கள் வீட்டில் இருக்கும்போது, தரை விரிப்பு பயன்படுத்துவது நல்லது. இல்லை என்றால் ஈரத்தன்மை கொண்ட தரையின் மூலம் அவர்களுக்கு மூட்டுவலியை அதிகரிக்கச் செய்யும்.

குளிர் பாதிக்காத அளவுக்கு முழுக்கை சட்டைகள், பருத்தியாலான கனமான ஆடைகள் அணிவது நல்லது.

வண்டியில் குழந்தையை அழைத்துச் செல்லும்பட்சத்தில் முன்னால் உட்காரவைக்கக் கூடாது. தகப்பனுக்கும் தாய்க்கும் நடுவில் அமரவைத்துக்கொள்ள வேண்டும். மடியில் அமரவைக்கும்போது முன்பக்கம் பார்த்து உட்காரவைக்காமல் எதிர்திசையில் வயிற்றுப்பகுதியைப் பார்த்தவாறு அமரவைத்தால் காற்று மூலமாக சுவாசத்தில் கலக்கக்கூடிய கிருமிகள் தாக்காமல் இருக்கும்.

வயதானவர்களுக்கு குளிர்காலங்களில் மூட்டுவலி அதிகமாக இருக்கும். தேங்காய் எண்ணெயை சுடச்செய்து, கற்பூரத்தை அதில் கரைத்துத் தேய்ப்பது மூட்டுவலிக்கு உடனடி நிவாரணியாக இருக்கும்.

மழைக்காலங்களில் பொதுவாகவே நன்றாகப் பசிக்கும். மேலும் முதியவர்கள் மழைக்காலத்தில் நடைப்பயிற்சி செய்ய முடியாது. சர்க்கரை வியாதி இருப்பவர்கள் நடைப்பயிற்சியும் செய்யாமல், பசி எடுக்கிறது என்பதால் அதிகமாகவும் சாப்பிடுவார்கள். மழை நேரத்தில் காரமாக எதாவது சாப்பிட வேண்டும் என்ற உணர்வு வருவதுபோல அவர்களுக்கும் தோன்றும். மழைக்காலம் என்பதால்தான் அதிகமாக சிறுநீர் வெளியேறுகிறது என்று நினைத்துக்கொள்வார்களே தவிர, அதிகமாகச் சாப்பிட்டது காரணம் என்று உணர மாட்டார்கள். எனவே சர்க்கரை வியாதி உள்ளவர்கள் உணவு விஷயங்களில் கவனமாக இருப்பதும், சாப்பிடக்கூடிய பொருள் அதிக சர்க்கரையைத் தராதபடி பார்த்துக்கொள்வதும் அவசியம்.

மழைக்காலங்களில் இரவு உணவு சாப்பிடாமல் படுப்பதை அறவே தவிர்க்க வேண்டும்.

**மழை ஓய்ந்த பின் வரும் தோல் பிரச்னைகளில் இருந்து நம்மைக் காத்துக்கொள்ள தோல்மருத்துவர் பி.சி.மைதிலி தரும் ஆலோசனைகள்...**

மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களும், உதவியவர்களும் பெரும்பாலும் தண்ணீரிலேயே இருந்திருப்பார்கள். முதலில் உடம்பில் ஈரப்பதம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஈரப்பதம் இருந்தால் தொற்று நோய்கள் நம்மை எளிதாகத் தாக்கக்கூடும். உடைகள் நனைந்திருந்தால், வீட்டுக்கு வந்தவுடன் உடனடியாக மாற்ற வேண்டும்.

குளித்த பின் உடலை நன்றாகத் துவட்டி, துண்டை சுத்தமான் தண்ணீரில் துவைத்து, நன்கு உலரவைக்க வேண்டும். படர்தாமரை போன்ற காளான் தொற்று பாதித்தவர்கள் பயன்படுத்திய துண்டு மற்றும் ஆடைகளை மற்றவர்கள் பயன்படுத்தினால் படர்தாமரை பரவும்.

**(22 ஆம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார இராசி பலன்

**16.12.2015 – 22.12.2015**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**மேஷம்**

தந்தை வழி உறவினர்கள் உதவுவர். குடும்பத்தின் தேவையை தாராள செலவில் நிறைவேற்றுவீர்கள். விவகாரங்களில் சமரச தீர்வு கிடைக்கும். புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடந்து பெருமை தேடித்தருவர். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கூடும். வெளியூர் பயணத்தில், உரிய பாதுகாப்பு வேண்டும். மனைவியின் கருத்தை ஏற்பதால், குடும்ப ஒற்றுமை வளரும். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற தாமதமாகலாம். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும்.



**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்**

**ரிஷபம்**

செயல்பாடுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். திட்டமிட்ட பணி குறித்த காலத்தில் நிறைவேறும். உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். புத்திரர்கள் படிப்பு, வேலையில் திறமையை வளர்த்துக் கொள்வர். வட்டிக்கு கடன் வாங்க வேண்டாம். மனைவியின் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் கூடுதல் சலுகையும், பணவரவும் பெறுவர். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது. மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைக்கவும்.



**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்**

**மிதுனம்**

அரசு சார்ந்த சில நன்மைகள் கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து மகிழ்வீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனத்தில் அபிவிருத்தி பணி செய்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், குடும்ப உறுப்பினர்களின் பாராட்டைப் பெறுவர். மாணவர்கள் படிப்புடன் பொது அறிவிலும் மேம்படுவர்.



**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கடகம்**

புதியவர்களின் அறிமுகம் உதவி எதிர்பாராமல் கிடைக்கும். இளைய சகோதர வகையில், மங்கல நிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை சுமுகமாக அமையும். புத்திரர்கள் சில விஷயங்களில் பிடிவாதம் செய்வர். நோய் தொந்தரவு குறையும். மனைவி அன்புடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். பணியாளர்கள் பணியில் சிறப்பாக செயல்பட்டு சலுகை பெறுவர்.



**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**சிம்மம்**

மனைவியின் சொல்லும், செயலும் குடும்ப நலனுக்கு உதவும். பயணத்தில் பாதுகாப்பு பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் இருக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும் ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள், தாய் வீட்டு உதவி பெறுவர். மாணவர்கள் புதியவர்களுடன் பழகுவதில் நிதானம் வேண்டும்.



**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்**

**கன்னி**

மனதில் தைரியம், செயலில் திறமை வெளிப்படும். பொதுநலப் பணியில் ஈடுபாடு வளரும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். நண்பர்களிடம் கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் உதவுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து சேமிப்பு கூடும். பணியாளர்கள் குறித்த காலத்தில், பணிகளை முடித்து அதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவர். பெண்கள் சிக்கனமாக இருந்து சேமிப்பர்.



**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.**

**துலாம்**

தாயின் அன்பு, ஆசி கிடைக்கும். வீண்செலவு குறையும். புத்திரர்கள் உலக நடப்புக்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். உடல்நிலையில் கவனம் தேவை. மனைவி சொல்லும் ஆலோசனையை ஏற்பது நன்மை தரும். தொழில், வியாபாரம் செழிக்கும். பாக்கிப் பணம் வசூலாகும். பணியாளர்கள், தன் கடமையை உணர்ந்து பணிபுரிவர். பெண்கள், உறவினர் குடும்பத்தில் ஒற்றுமை வளர உதவுவர். மாணவர்கள் நன்றாக படித்து சிறந்த தரத்தேர்ச்சி பெறுவர்.



**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**விருச்சிகம்**

பணிகளை விரைந்து முடிக்க வாய்ப்பு கிடைக்கும். நல்லவர்களின் உதவி கை கொடுக்கும். தாயாரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். புத்திரர்கள் உங்கள் வழிகாட்டுதல்களை ஏற்றுக்கொள்வர். மனமும், உடலும் புத்துணர்வு பெறும். மனைவி வழி உறவினர்கள், உங்களுடன் சுமுக உறவு கொள்வர். பயணங்கள் இனிய அனுபவம் தரும். தொழில், வியாபாரம் பெருமளவு வளர்ச்சி பெறும்.



**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**தனுசு**

பயணங்கள் இனிதாக அமையும். புத்திரர்கள் திறமையை பயன்படுத்தி நற்பெயரும், புகழும் பெறுவர். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். சுற்றுலா பயணத்திட்டம் வகுப்பீர்கள். மனைவி விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை வளரும். தொழில், வியாபாரத்தில் வேலை அதிகம் இருந்தாலும், பணவரவால் மகிழ்வீர்கள். பணியாளர்கள், சக ஊழியர்கள் விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.



**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.**

**மகரம்**

செல்வ வளம் சேரும். வாகனத்தின் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர், பெற்றோரிடம் தமது தேவையை நிறைவேற்ற சொல்வர். அளவான உழைப்பும் சீரான ஓய்வுமே. உங்கள் உடல்நலத்தை பாதுகாக்கும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில், மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்க, உயர் அதிகாரி துணை புரிவார். பெண்கள், குடும்பநலன் பாதுகாப்பதில் அக்கறை கொள்வீர்கள்.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.**

**கும்பம்**

புத்திரர்கள் நல்ல செயல்களால், உங்கள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவர். பூர்வ புண்ணிய பலன், சில நன்மைகளை உருவாக்கும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவி வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி வளர்ச்சி பாதையில் நடைபோடுவீர்கள். பணியாளர்கள் பாதுகாப்பு நடைமுறையில், உரிய கவனம் கொள்ளவும். பெண்கள் பிள்ளைகளின் நலன் சிறக்க, தேவையான பணிபுரிவர். மாணவர்கள் படிப்பில் ஆர்வம் கொள்வர்.



**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மீனம்**

விஷப் பிராணிகளால் பிரச்னை வரலாம்; கவனம். ஆரோக்கியம் மேம்படும். கொடுக்கல், வாங்கலில் மிக கவனமாக இருக்க வேண்டும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர, சில மாற்றங்களைச் செய்வீர்கள். பணியாளர்கள் வேலையைத் திறம்படச் செய்வர். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பெண்கள் தாய் வீட்டு பெருமையை காத்திடுவர்.



# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 115



விடுதலைப்புலிகளுக்கும் அமைதிப் படைக்கும் இடையே அதிகரிக்கும் முறுகல் நிலை! துயர நிகழ்வுகளால் கொதிப்படைந்த பொது மக்கள் வெளிப்படையாகவே இந்தியப் படைகளுக்குப் பணிய மறுத்தார்கள். அதே சமயம், சிங்களப் பொதுமக்கள் கொல்லப் பட்டமைக்கு ஜெயவர்த்தனா அரசு புலிகள் மீது பழி சுமத்தியதோடு , புலிகள் மீது இந்திய இராணுவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நிர்ப்பந்தித்தது. பிரதம இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் சுந்தர் ஜீ இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே. சீ பான்றும் கொழும்புக்கு விமானம் மூலம் சென்று, அரசுத் தலைவர் ஜெயவர்த்தனாவுடன் மந்திராலோசனை நடத்தினார்கள். இராணுவ நடவடிக்கை மூலமாக இந்தியப் படைகள் விடுதலைப்புலிகளை நிராயுதபாணிகளாக ஆக்க இந்தியா தீர்மானித்திருப்பதாக ஜெயவர்த்தனாவுக்குத் தெரிவித்தார்கள். ஜெயவர்த்தனாவுக்கு இதனால் பெரும் மகிழ்ச்சி. இந்திய இராணுவம் பயிற்சி கொடுத்து ஆயுதம் வழங்கி, காப்பாற்றி வந்த தமிழ்ப்புலி கெரில்லா வீரர்களுக்கு எதிராக இந்திய இராணுவத்தின் துப்பாக்கிகளே திரும்புகின்றன என்றால் தமது தந்திரம் இறுதியாகப் பலித்து விட்டதை ஒட்டி அவருக்குத் திருப்தி. ஜெயவர்த்தனாவுக்கு இது ஒரு இராஜதந்திர வெற்றி. ஆனால் தமிழ் மக்களுக்கு இது பேரிடி. பலாத்காரம் மூலம் விடுதலைப்புலிகளை நிராயுத பாணிகள் ஆக்குவதற்காக யாழ்ப்பாணம் மீது இந்திய இராணுவம் படையெடுப்பதற்கான திகதி ஒக்ரோபர் 10என்று குறிக்கப்பட்டது. தமது இராணுவ நடவடிக்கை பற்றி, தமிழ்ப் பொதுமக்கள் எதுவும் அறியக் கூடாது என்பதற்காகவும் , யாழ்ப்பாணத்தில் உள்ள சுதந்திரமான செய்தி ஊடகம் மீது இந்திய இராணுவம் திடீரென்று துரித நடவடிக்கை எடுத்தது. இராணுவத் தாக்குதல் நடத்தப்படுவதற்கு சில மணி நேரம் முன்னதாக, ஒக்ரோபர் 10 அதிகாலையில் 'ஈழமுரசு' 'முரசொலி' ஆகியவற்றின் அச்சுக்கூடங்களை வெடிக்க வைத்துத் தகர்க்கப் பட்டதோடு, செய்தியாளர்களும் கைது செய்யப்பட்டார்கள். வானொலி, தொலைக்காட்சி நிலையங்களும் தகர்க்கப்பட்டு ஒலி, ஒளி பரப்புப் பொறிகள் செயலிழக்கச் செய்யப்பட்டன. யாழ்ப்பாண மக்களின் கருத்துச் சுதந்திரத்தையும், வெளியீட்டுச் சுதந்திரத்தையும் முடுக்கி ஜனநாயகத்தின் கருவியையே தகர்த்து ஒழிக்கும் பாதகக் கொடுமையை உலகின் ஆகப்பெரிய ஜனநாயக நாடு புரிந்தது. புகழ் பெற்ற யாழ்ப்பாண நகரை நோக்கி ஒல்லாந்தர் கோட்டையில் இருந்து தாக்கப்புறப்பட்ட இந்தியப்படைகளை எதிர்கொண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதி காலையில்ஆயுதம் தரித்த விடுதலைப் புலிகளின் சிறிய அணிகள் கடுமையாக எதிர்த்துப் போரிட்டது. இந்தியாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே முழு அளவிலான போர் தொடங்கியது. வன்செயல், சாவு , அழிவு என்ற புதிய முன்னெப்போதும் காணாத ஒரு நச்சு சூழலுக்குள் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது.

**பவான் இராணுவ நடவடிக்கை**

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக இந்தியப் படைகளை அமைதிப்படை என்ற பெயரில் அனுப்பி வைப்பதற்கு முன்னதாக தேவைப்பட்டால் விடுதலைப்புலிகளை வலுக்கட்டாயமாக நிராயுதபாணிகளாக எழுபத்திரண்டு மணி நேரம் தாராளம் என்று இந்திய உயர்இராணுவ பீடம் கணிப்பிட்டிருந்தது.

**(பதிவு தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டாய் பறந்து வா





சில்லென அடிக்கும் காற்று
மெல்ல மேனியை வருடிடவே
இரைந்து ஓங்கும் அலைகளைக்
கரையில் நின்று ரசித்திடவே...

கட்டம் கட்டமாய் நூலை விட
பட்டம் உயர உயரப் பறந்திடவே
தோட்டம் தோட்டமாய்ப் பறக்கும்
பட்டங்களை பார்த்து ரசித்திடவே...

விண்ணில் ஒளிரும் வட்ட நிலவை
வண்ண முகில்கள் மறைத்திடவே
தாரகைகள் மின்னும் அழகினை
தரையில் நின்று ரசித்திடவே...

மணல் வீடு கட்டி நாமும்
மன மகிழ்ந்து விளையாடிடவே
சிட்டாய்ப் பறந்து வந்திடுவாய்
கடற்கரைக்குச் சென்றிடவே...!!

- பாளித்



## ஆசிரியருக்கு அறிவூட்டிய குழந்தை


ஒரு பள்ளி ஆசிரியர் வண்ணப் புத்தகத்தில் யானையின் படத்தை வரைந்து கொண்டு வந்து, அதைக் காண்பித்து, இது என்ன? என்று மாணவர்களைக் கேட்டார்.

சின்னக் குழந்தைகள் எல்லாம் மகிழ்ச்சியாக, யானை!, யானை! என்றார்கள். அவர்களைப் பாராட்டி விட்டு அடுத்த வகுப்பை நோக்கிச் சென்றார் அந்த ஆசிரியர். அங்கும் அந்த யானையின் படத்தைக் காண்பித்து இது என்ன? என்று கேட்டார்.அங்கும் பல குழந்தைகள் யானை என்று குரலெழுப்பின.அங்கிருந்த ஒரு சின்ன குழந்தை எழுந்து, ஐயா, அது யானை அல்ல... அது யானையின் படம் என்றது. அந்தக் குழந்தையின் அறிவு ஆசிரியரின் அறியாமையை அவருக்கு உணர்த்துவதாக இருந்தது.

- கணேஷ் அரவிந்த்,



# சிறுவர் உலகம்



## வர்ணம் தீட்டுவோம்


## வேண்டுகோள்



அன்னை தெரசாக்கு உலகப் புகழ் பெற்ற நோபல் பரிசு 1979 ஆம் ஆண்டில் வழங்கப் பட்டது. இந்தப் பரிசினைப் பெறுவதற்காக அன்னை தெரசா சுவீடன் நாட்டுக்குச் சென்றார்.நோபல் பரிசு பெறுபவர்களுக்கு ஆடம்பர விருந்து அளித்துப் பாராட்டிப் பரிசு வழங்குவது வழக்கம்.இதையறிந்த அன்னை தெரசா பரிசுக் குழுவினரிடம் சென்றார். இவ்வளவு பெருந்தொகை செலவழித்து ஏன் விருந்து வைக்க வேண்டும்? அந்தத் தொகை யினை என்னிடம் வழங்கினால் அதைக் கொண்டு மேலும் பல ஏழைகளுக்குப் பசி போக்கிட உதவ முடியும் என்றார் அன்னை தெரசா.அன்னை தெரசாவின் பேச்சு விழாக் குழுவினரை நெகிழ வைத்து விட்டது.அவரது வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, விருந்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை முழுவதையும் அன்னை தெரசாவிடமே வழங்கினர்.

- தேனி.

இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்



## நன்றியில்லையே

வாழும்போது
மேலேற,
ஏணியாய் இருந்து
ஏற்றி விடுகிறோம்...

இடை வாழ்வில்
இன்பம் சேர்க்க,
இசையாகிறோம்
புல்லாங்குழலாய்...

இவன் கதை
முடிந்த பின்னே,
பாடையாகிப்
பாரம் சுமக்கிறோம்...

நன்றியேயில்லை
மனிதனுக்கு-
எங்கள்
காட்டை அழித்து
வீட்டைக் கட்டுகிறானே...!



- செண்பக ஜெகதீசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமது வெள்ளையானால்...

சிறுகதை

மிருசுவில் தமிழ்தாசன்,
மீசாலை.

**ஐயர் தீபாராதனை காட்டும் வேளைகளில் மங்கல வாத்தியம் உரத்து ஒலிக்க, கண்டா மணியுடன் சங்கு , சேமக்கலம் சேந்தொலிக்க வரிசையில் நின்ற பக்தர்களனைவரும் தங்களை மறந்த நிலையில் முருகனின் திரு நாமத்தைச் சொல்லி அரோகரா கோஷம் எழுப்பி சிரசுகளின் மேல் கைகூப்பி பக்தி சிரத்தையுடன் வணங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் எனக்கு முன்னே பனை மரம் போல் நின்றிருந்த மனிதன் மட்டும் எதுவிதமான அங்க அசைவுகளின்றி அசையாமல் நின்று கொண்டிருந்ததைப் பார்க்க எனக்கு ஒரு விதத்தில் சந்தேகமும் உண்டாகத் தவறவில்லை.**

அன்று அந்த முருகன் ஆலயத்தில் ஐந்தாம் திருவிழா. கோயில் அப்படியொன்றும் ஆடம்பரமான கட்டிடங்களைக் கொண்டதல்ல. கிராமத்தின் தெற்குப் புறத்தில் எளிமையான கட்டிடத்தில் அமைதியான சூழலில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் முருகப் பெருமான். அன்றாடம் நடைபெறும் நித்தியபூசைகள் அடியவர்கள் எவருமின்றி கோயிற் குருக்களுடன் நடந்து முடிந்து விடும். ஊரவர்கள் தாங்களும் தங்கள் சோலியுமென்று அவரவர் காரியங்களிலே கண்ணாயிருப்பர். ஏதாவது விசேட தினங்களில் மட்டும் ஓரளவுக்கு அடியார்கள் கூட்டத்தைக் காணலாம். அந்த வரிசையில் அன்று ஐந்தாம் திருவிழா என்ற படியால் கூட்டம் சற்று அதிகமாகக் காணப்பட்டது. காண்டாமணியின் ஓசை ஊரெங்கும் வியாபித்துக் கோயில் திருவிழாவுக்குக் கட்டியம் கூறியது. சந்திரசேகரக் குருக்கள் சிகப்புப் பட்டு வேட்டியணிந்து கழுத்து நிறைய உருத்திராட்ச மாலைகளுடன் சுடுநீர் குடித்த நாய்க்கடுவன் போன்று ஓடியாடித் திரிந்து கொண்டிருந்தார். மதியப் பூசைக்கு நேரமாகிக் கொண்டிருந்த படியால் தான் இந்தப் பரபரப்பு. அடியவர்கள் ஏராளமானோர் கோயிலை நோக்கிப் படையெடுத்துக் கொண்டிருந்தார்கள். மதிய நேரப் பூசை ஆரம்பமாகப் போகின்றது. எல்லோரும் பூசை காண் பதற்காகத்தான் வந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. திருவிழா நடைபெறும் பத்துத் தினங்களும் அன்னதானம் வழங்கப்படுமென்னும் அறிவித்தலின் பிரதிபலனே இந்த அதிகமான அடியவர் கூட்டத்துக்குரிய காரணம் என்பதை யாரும் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

முருகன் சன்னிதானத்துத் திரைச்சேலை விலக்கப்பட ஐயரின் தீபாராதனையில் முருகன் பளிச்சிட்டுக் காட்சி தந்தார். அரோகரா கோஷம் வானைப்பிளக்க அந்தப் பூசை நேரம் உண்மையிலேயே தெய்வீகக் களை கொட்டிக் கிடந்தது.

எங்கே! ஒரு தடவையாவது முருகனின் கண்கொள்ளாக் கட்சியைக் கண்டு களித்திடலாமென்றால் எனக்கு முன்னே நிற்குமந்த மனிதன் விட்டால்தானே! ஆறடிக்குக் குறையாத உயரம் அகலமும் சும்மா சொல்லக் கூடாது. பல அடி அங்குலங்களைக் கொண்டதாயிருந்தது. மூலஸ்தானத்தைப் பார்த்து முருகனைக் கும்பிட ஆசைப்பட்ட எனக்கு அந்த மனிதன் நந்தி போல மறைத்துக் கொண்டிருந்தது மிகவும் ஆத்திரத்தை யூட்டியது.

என்னதான் சிறிய கோயிலாக இருந்தாலும், அதன் நிர்வாகத்தை வாய் விட்டுப் பாராட்டத்தான் வேண்டும் போன்றிருந்தது. பெண்கள் வரிசையில் பெண்கள் தான். ஆசைக்குக் கூட ஒரு ஆண் மகனைப் பார்க்க முடியவில்லை. ஆண்களின் வரிசையிலும் நின்றவர்கள் ஆண் அழத்து நிறுத்தி விட்டதைப் போன்று அவர்களின் வரிசையிலேயே அசையாது நின்று பக்தி பூர்வமாகப் பூசை கண்டு கொண்டிருந்தனர். சிறுவர்கள் மட்டும் கட்சி மாறும் அரசியல் வாதிகள் போன்று தாயிடமிருந்து தந்தையிடமும் பின்பு தந்தையிடமிருந்து தாயிடமும் மாறி மாறி ஓடியாடி விளையாடிக் கொண்டிருந் தனர். அதைவிட வரிசை ஒழுங்குகள் மிக நேர்த்தியாகவும் கட்டுப்பாட்டுடனுமே இருந்தது. எனக்கு முன்னே நிற்கும் அந்தத் தடியனை சற்று விலகி நிற்கச் சொல்லவும் முடியவில்லை. அந்த ஒழுங்கான வரிசையைக் குழப்புவதற்கு நான் காரணமாகக் கூடாதென்ற எச்சரிக்கையுணர்வு என்னை நெறிப்படுத்திவிட அந்தத் தடித்த மனிதனின் முதுகைப் பார்த்து அதிலே முருகனின் திருவுருவத்தை கற்பனை பண்ணிக் கும்பிட வேண்டிய பரிதாப



நிலைமை எனக்கு.

ஐயர் தீபாரதனை காட்டும் வேளைகளில் மங்கல வாத்தியம் உரத்து ஒலிக்க, கண்டாமணியுடன் சங்கு , சேமக்கலம் சேந் தொலிக்க வரிசையில் நின்ற பக்தர்களனைவரும் தங்களை மறந்த நிலையில் முருகனின் திருநாமத்தைச் சொல்லி அரோகரா கோஷம் எழுப்பி சிரசுகளின் மேல் கைகூப்பி பக்திசிரத்தையுடன் வணங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் எனக்கு முன்னே பனைமரம் போல் நின்றிருந்த மனிதன் மட்டும் எதுவிதமான அங்க அசைவுகளின்றி அசையாமல் நின்று கொண்டிருந்ததைப் பார்க்க எனக்கு ஒரு விதத்தில் சந்தேகமும் உண்டாகத் தவறவில்லை. எல்லோரும் கையெடுத்துக் கும்பிடும் போது இவனொருவன் மட்டும் மரம் போல நின்று கொண்டிருப்பதுவே எனது சந்தேகத்துக்கு காரணமாயிருந்தது.

"நீயொரு பொலிஸ்காரனாயிருக்க வேண்டியவன். தட்டுத்தவறி வாத்தி வேலைக்கு வந்திட்டாய் மச்சான்" என்னுடைய ஆசிரிய நண்பர்கள் இப்படி என்னை அடிக்கடி ஏளனம் செய்வதுண்டு. உண்மையிலேயே இயல்பாக நான் ஒரு சந்தேகப் பேர் வழி என்பதை நான் என்றைக்குமே மறுத்ததோ மறைத்ததோ கிடையாது. சில வேளைகளில் இந்தச் சந்தேகமே எனக்கு மிகப் பெரிய பலமாகவும் அமைவதுண்டு. எனவே என்னுடைய சுபாவத்தை நான் எதற்காக மாற்ற வேண்டும்.

"கையெடுத்துச் சாமி கும்பிடாதவனுக்கு முருகன் சந்நிதானத்திலை என்ன வேலை! சங்கிலி, கொடி ஏதேனும் அறுக்க வந்திருப்பானோ! சொல்ல ஏலாது. கள்ளனாயுமிருக்கலாம். அல்லது அன்னதானச் சோத்துக்கெண்டு அலைஞ்சுலைஞ்சு வந்து நிற்கிறானோ! சரி அப்பிடியெண்டாலும் அவனுக்கு இஞ்சை என்ன வேலை! தானும் கும்பிடாமல் என்னையும் கும்பிட விடாமல் .... ஆரடா! இந்தப் பரதேசி! ஒருக்கால் கேட்டுத்தான் பார்க்க வேணும்"மனத்தில் திட சங்கற்பம் பூண்டு கொண் டேன். எப்பிடியாவது சந்தேகத்தைத் தீர்க்க வேண்டும்.

"அண்ணை! நீங்கள் சாமி கும்பிடுற பழக்கமில்லைப் போலக்கிடக்கு. அப்பிடியெண்டால் பேசாமல் போய் அன்ன தான மடத்துக்கை நிக்கிறதுக் குச் சாமி கும்பிடுற எங்களை ஏன் தடுத்துக் கொண்டு இடைஞ்சலாக நிற்கிறியள்!"ஒருவாறு கேட்டுத்தான் விட்டேன்.

"தம்பி! நானும் உங்கள் எல்லோரையும் போலை சாமி கும்பிட்டுக் கொண்டு தானிருக்கிறேன். ஆனால் ஒண்டு...! நீங்களெல்லாம் கையெடுத்துக் கும் பிட்டு ஆரவாரம் போட்டுக் கும்பிடு றியள். ஆனால் என்னாலை அப்பிடிக் கும்பிட ஏலாது"

"ஏன் ஏலாது ! நானும் பார்த்தன் ஒருக் கால்க் கூடி கையெடுத்துக் கும்பிடவில்லையே!"

"ஓம் தம்பி ! இஞ்சை பாரும். இந்த இரண்டு கட்டையளையும் வைச்சு எப்படி ஐயா உங்களை மாதிரிக் கும்பிட ஏலும்"

அடக்கடவுளே! அந்த மனிதனுக்கு இரண்டு கைகளுமே முழங்கைகளுக் குக் கீழே இல்லாமலிருந்தன. பார்க்கப் பரிதாபமாகவிருந்தது.

"கடவுளைக் கும்பிடுறதுக்கு கை மட்டும் தான் வேணும் எண்டில்லைத் தம்பி. சுத்தமான மனமிருந்தாலும் போதும். கையைப் பறிச்சாலும் கடவுள் நல்ல மனத்தைத் தந்திருக்கிறான். அது ஒண்டே போதும். மனம் வெள்ளையா யிருந்தால் கடவுளைக் கையெடுத்துக் கும்பிட வேணுமெண்ட அவசியமேயில் லைத் தம்பி"

எனக்கு வார்த்தைகள் வரவில்லை. அந்த ஊனமுற்றவனையே பார்த்துக் கொண்டிருந் தேன். அந்த உருவத்திலே முருகனைக் கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய.....

( 11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடையும் நிலையில் அவர்களால் உலகெங்கும் உள்ள பல நாடுகளுக்குத் தப்பிச்செல்ல முடியும். துருக்கியில் அவர்களுக்கு பேராதரவு உண்டு. பாரிஸ் குண்டு வெடிப்பின் பின்னர் துருக்கியில் துருக்கிக்கும் கிரேக்கத்திற்கும் இடையில் நடந்த நட்புக் காற்பந்தாட்டப் போட்டியின் போது பாரிஸில் கொல்லப் பட்டவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்திய போது மைதானத்தில் இருந்த பலரும் கூச்சலிட்டும் ஐஎஸ்ஸிற்கு ஆதரவாக அல்லாஹு அக்பர் என்று குலரெழுப்பியும் குழப்பம் விளைவித்தனர். துருக்கி யினூடாக ஐ எஸ் அமைப்பின ரால் தப்பி பல நாடுகளுக்குச் செல்ல முடியும்.

**நெரிசலில் தப்பும் ஐ எஸ் அமைப்பு**

ஈராக்கிலும் சிரியாவிலும் ஐ எஸ் அமைப்பினருக்கு ஒன்றுடன் ஒன்று பல்வேறு வகைகளில் முரண்படும் பல தரப்பினர் தாக்குதல் நடத்துகின்றார்கள். சிரிய அரச படைகளுக்கு எதிராக நூற்றிற்கு மேற்பட்ட அமைப்புக்கள் போராடுகின்றன. ஒரு புறம் சிரிய அரச படைகள், ரஷ்யப் படைகள், ஈரானியப் படைகள், ஹிஸ்புல்லா அமைப்பு ஆகியன ஐ எஸ் அமைப்பிற்கு எதிராகத் தாக்குதல்கள் செய்கின்றன. ரஷ்ய விமானத் தாக்குதல்கள் ஐ எஸ் அமைப்பினருக்கு எதிராகச் செய்வதிலும் பார்க்க மேற்கு நாடுகளுக்கு ஆதரவாகவும் சிரிய அரச படைகளுக்கு எதிராகவும் செயற்படும் அமைப்புக்களுக்கு எதிராகவே அதிக தாக்குதல்களைச் செய்கின்றன. துருக்கியப் படைகள் ஐ எஸ் அமைப்பினர் மீது தாக்குதல் செய்வதிலும் பார்க்க குர்திஷ் அமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவதில் அதிக அக்கறை காட்டுகின்றார்கள். ரஷ்யா குர்திஷ் போராளிகள் மீது தாக்குதல் நடத்துவதில்லை. அமெரிக்கா கடந்த சில மாதங்களாக குர்திஷ் போராளி அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுகின்றது. சிரியாவில் வாழும் துருக்கியர்களின் போராளி அமைப்பு மீது இரசியா தாக்குதல் செய்வது துருக்கியை ஆத்திரப் படுத்தி அது இரசிய விமானத்தைச் சுட்டு விழுத்தியது. அதன் பின்னர் இரண்டு நாடுகளும் ஐ எஸ் அமைப்பினர் மீது தாக்குதல் நடாத்துவதை விட்டு ஒன்றின் மீது ஒன்று சேறு வீசிக் கொண்டிருக்கின்றன. மேற்காசியாவிலோ வட ஆபிரிக்காவிலோ ஒரு பிரச்சினை என்றால் முதலில் போய் இறங்குவது பிரான்ஸ்தான். ஐ எஸ் அமைப்பினருக்கு எதிரான விமானத் தாக்குதல்கள் இதுவரை வெற்றியளிக்கவில்லை.

அமெரிக்கா மேலும் ஐம்பது சிறப்புப் படையினரை ஈராக்கிற்கு அனுப்பியுள்ளது. ஏற்கனவே 3400 அமெரிக்கப் படையினர் ஐ எஸ் அமைப்பினருக்கு எதிரான தாக்குதலுக்கு அறிவுரை வழங்க அனுப்பப்பட்டுள்ளனர். சிறப்புப் படையினர் சிறு குழுக்களாகச் சென்று தெரிவு செய்யப் பட்ட இல்க்குகள் மீது, தெரிவு செய்யப் பட்ட ஐ எஸ் தலைவர்கள் மீது நன்கு திட்ட மிட்ட துணிகரத் தாக்குதல்கள் செய்வர். ஆனால் டிசம்பர் முதலாம் திகதி வெளி வந்த 'வொஷிங்டன் போஸ்ட்' தினசரியில் பல ஈராக்கியர்கள் அமெரிக்கா ஐ எஸ் அமைப்பினருக்கு ஆதரவு வழங்குவதாக நம்புகின்றார்கள். பலர் அமெரிக்க உலங்கு வானூர்திகள் ஐ எஸ் அமைப்பினருக்கு படைக்கலன்களும் நீர்ப் போத்தல்களும் வழங்குவதை நேரில் கண்டதாகவும் வாஷிங்டன் போஸ்ற் தெரிவித்துள்ளது. ஐ எஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இருந்து எரிபொருள் நிரப்பிக் கொண்டு செல்லும் பார ஊர்திகளை அமெரிக்காவால் இலகுவாக விமானத் தாக்குதல் மூலம் அழிக்க முடியும் ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக அதை அமெரிக்கா செய்யவில்லை. இப்போது அந்தப் பார ஊர்திகளுக்கு எச்சரிக்கைத் துண்டுப் பிரசுரம் வீசி அதன் ஓட்டுனர்களைத் தப்பி ஓடச் சொல்லி விட்டுத் தாக்குதல் செய்கின்றன. அமெரிக்காவின் நட்பு நாட்டுக் குடிமக்களைக் கொல்லாமல் இருக்கவே இப்படி அமெரிக்கா செய்கின்றதாம்.

இதுவரை காலமும் பிரித்தானியா ஈராக்கில் மட்டும் ஐ எஸ் அமைப்பினருக்கு எதிராகத் தாக்குதல் நடாத்தியது. இத்தாக்குதல்கள் ஈராக்கிய அரசின் வேண்டுதலின் பேரில் நடந்த படியால் பிரித்தானியப் நாடாளுமன்றத்தின் அனுமதி பெறாமல் தாக்குதல் செய்யக் கூடியதாக இருந்தது. சிரிய அரசு அப்படி ஒரு வேண்டுதலை விடுக்காதப் படியால் பிரித்தானியா சிரியாவில் உள்ள ஐ எஸ் போராளிகளுக்கு எதிராகத் தாக்குதலைச் செய்யவில்லை. டிசம்பர் இரண்டாம் திகதி பத்து மணித்தியால விவாதத்தின் பின்னர் பிரித்தானிய நாடாளுமன்றம் சிரியாவில் விமானத் தாக்குதல் நடத்த அனுமதி வழங்கியுள்ளது.

வெறும் விமானத் தாக்குதல் மட்டும் ஒரு கரந்தடிப் போர் செய்யும் படையை அழிக்க முடியாது. அதை அடக்க மட்டும் முடியும். ஐ எஸ் அமைப்பினர் தமது தளங்களை வேறு பல இடங்களுக்கு மாற்ற முடியும்.

# மழைக்கால.....

( 18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மழை நீரில் சென்று வந்தால், கால்களை நன்கு கழுவித் துடைக்க வேண்டும். குறிப்பாக விரல் இடுக்குகளில் ஈரம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கைகளையும் அடிக்கடி கழுவுவது நல்லது.

மழைக்காலங்களில் சப்பாத்து அணிவதைத் தவிர்த்து காற்றோட்டமுள்ள செருப்புகளைப் பயன்படுத்தவும். கால்களில் காற்றோட்டம் இருந்தால் தோல் பிரச்சினைகள் எதுவும் வாராது.

மழைக்காலங்களில் ஈரமான துணிகளை உடுத்தாமல் இருப்பது நல்லது. நன்றாகக் காய்ந்த துணிகளையும் முடிந்தால் பருத்தியினால் ஆன உள்ளாடைகளையும் அணியவும். ஈரமான உள்ளாடைகளை அணியவே கூடாது. உடைகள் விஷயத்தில் கவனமாக இருந்தாலே, சருமப் பிரச்னைகள் வருவதைத் தவிர்க்கலாம்.

தோலில் படர்தாமரை எனப்படும் காளான் தொற்று, காலில் ஏற்படும் சேற்றுப்புண், குழந்தைகளுக்கு ஏற்படும் சிரங்கு நோய், கொசுக்கடியினால் தோலில் ஏற்படும் ஒவ்வாமை ஆகியவை மழைக்காலங்களில் அதிகமாக பாதிக்கின்றன. இவை எல்லாம் வராமல் தடுக்க காலை, மாலை இரண்டு வேளையும் மிதமான சுடுநீரில் குளிக்க வேண்டும்.

# பருவக்காதல்.....

( 14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதால் ஆடைத்தொழிற்சாலையிலுள்ளவர்களும் அந்த ஆவணங்கள் தொடர்பாக எந்தவித கேள்வியும் கேட்கவில்லை.

அதன்பின் எந்தவித பிரச்சினையுமின்றி இருவரும் அங்கு தொழில் பார்த்தோம். வாடகைக்கு சிறிய வீடு ஒன்றையும் பெற்றுக்கொண்டு அங்கிருந்து சென்றோம்.

எனினும், அப்போது எனக்கு 18 வயதை பூர்த்தியடையவில்லை என்பதால் பதிவுத் திருமணம் செய்துகொள்ள முடியவில்லை. எனவே, எனக்கு 18 வயதாகியவுடன் திருமணம் செய்துகொள்வோம் என்ற முடிவில் ஒரே வீட்டில் ஒன்றாக வசித்தோம்.

கால சக்கரம் விரைவாக உருண்டோடியது. அப்போது தான் நான் சுஜித் அண்ணாவின் உண்மையான சுயரூபத்தை அறிந்துகொண்டேன். எனது தந்தையை போலவே சுஜித் அண்ணாவும் வேலை விட்டு வீட்டுக்கு வரும்போது குடித்து விட்டே வருவார்.

சிறுவயது முதலே எனது வாழ்க்கையில் நான் சந்தோஷமாக இருந்த நாட்கள் மிகக் குறைவு. எனினும், சுஜித் அண்ணாவை பார்த்த பிறகு தான் சிறிது நாட்கள் சந்தோஷமாக எனது பொழுதை கழித்தேன். ஆயினும், அதுவும் எனக்கு நிரந்தரமில்லை என்பதை நான் போகப் போக உணர்ந்துகொண்டேன்.

ஒரு நாள் நான்கு நண்பர்களையும் அழைத்துக் கொண்டு சுஜித் அண்ணா வீட்டுக்கு வந்தார். அனைவருமே குடித்தே இருந்தார்கள். அது மட்டுமின்றி, அவர்கள் கைகளிலும் மதுபான போத்தல்கள் இருந்தன.

எனவே, சுஜித் அண்ணாவை தனியாக அழைத்துச்சென்று அவர்களை இங்கிருந்து போகுமாறு முரண்பட்டேன். இருப்பினும், அவர் கேட்கவில்லை. மாறாக என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார்.

அதற்கு பிறகு நான் எதுவுமே கூறவில்லை. அவர்கள் அனைவரும் வரவேற்பறையில் அமர்ந்து மதுபான போத்தல்களுடன் ஆனந்தம் கொண்டார்கள். அதன்பின் சுஜித் அண்ணாவின் நண்பர்களில் ஒருவர் அங்கிருந்து வெளியே வந்து என்னுடன் தவறான முறையில் நடந்துகொண்டார்.

நான் சுஜித் அண்ணா, சுஜித் அண்ணா என்று பலமாக கத்தினேன். எனினும், அவர் அதை சிறிதும் பொருட்படுத்தவில்லை. அதன்பின் வந்த அனைவருமே என்னிடம் தவறான முறையில் நடந்துகொண்டார்கள். அப்போது கூட சுஜித் அண்ணா யாரோ ஒருவர் போல் அலட்சியமாக இருந்தார்.

இறுதியில்அந்தப் பாவிகளிடம் என்



வாழ்க்கையே சீரழிந்து போய்விட்டது. பொழுது விடிய அவர்கள் அனைவருமே எதுவுமே நடக்காதது போல் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். ஆனால், என்னுடைய வாழ்க்கைக்கு இனி விடியலே இல்லை என்ற நிலை உருவாகியது.

நண்பர்களிடம் என் மானத்தை விற்றவன் அதன் பின்னர் ஹோட்டல்கள், புறக்கோட்டை போன்ற இடங்களிலுள்ள விபசார விடுதிகளுக்கு என்னை அனுப்பி பணம் சம்பாதித்து உல்லாசமாக இருப்பான்.

எனினும், வெகு நாட்கள் செல்லும் முன்னர் இவ்விடயம் பொலிஸாருக்கு தெரியவர சுஜித் உட்பட அன்றைய தினம் வீட்டுக்கு வந்த நண்பர்கள் நான்கு பேரும் பொலிஸாரின் பிடியில் சிக்கினார்கள்.


எனக்கு குறைந்த வயது என்ற காரணத்தினால் சிறுவர் சீர்திருத்த பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்டேன். பெண்பிள்ளைகளின் வாழ்வை சீரழிப்பவர்கள் நிச்சயம் செய்த பாவத்துக்கு என்றாவது ஒரு நாள் தண்டனையை அனுபவிப்பார்கள் என்பதே உண்மை.

தாரகா இனி என்ன தான் அழுதாலும் அவளுடைய இளமைப்பருவம் மீண்டும் அவளுக்கு கிடைக்கப்போவதில்லை.. ஆனால், எல்லோரையும் போல வாழ அவளுக்கும் ஆசை தான்.

தாரகாவின் குடும்பச் சூழல், பெற்றோரின் பொறுப்பற்ற தன்மை போன்ற காரணங்களினால் இந்த நிலைக்கு தள்ளப்பட்டாள் என்றே கூற வேண்டும். அதுமட்டுமின்றி.. தாரகாவின் வாழ்க்கை இன்றைய இளம் சமூகத்தினருக்கும் பெற்றோருக்கும் நிச்சயம் ஒரு பாடமாகவிருக்கும்.

மூலம்: சிங்கள நாளேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டார் சைக்கிள் செலுத்துகையின் எதிர்காலம்
DEMAK

வரவு செலவு திட்டம் எதுவாகவிருந்தாலும் நன்மை எங்களிடமிருந்து

Seasonal Offer

நீங்கள் கொள்வனவு செய்யும் டிமாக் மோட்டார் சைக்கிள்களுக்கான

Registration FREE !
பதிவுகள் இலவசம்

MALAYSIA

Instalment basis payment facilities at head office showroom for HSBC credit card.

2015 டிசம்பர் 30 வரை மட்டுமே

www.facebook.com/Demaksrilanka

Hot Line: 011 7 711 211

லீசிங்

விநியோகஸ்தர்கள்
Demak Sales & Services Lanka (Pvt)Ltd
199, Vauxhall St. Colombo 02
Email : enquiry@demakmotor.lk web : www.demakmotor.lk

சேவை அழைப்பு : 077 7380 700

மேலும் விபரங்களுக்கு
யாழ்ப்பாணம் - டேமியன் - 774402087 | நுவரெலியா - பர்ஹான் - 771064803 | மத்திய கொழும்பு - முஜீத் - 772778334
திருகோணமலை - டார்சன் - 770105904 | கிளிநொச்சி - கலெமி - 772774978 | மட்டக்களப்பு - சுபாசன் - 770105905

சலுகைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது!

டாட்டா, லேலண்ட், ஹினோ மற்றும் கமின்ஸ் வாகன உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எஞ்சின் பழுதுபார்ப்பிற்காக வழங்கப்பட்ட

எமது சலுகைக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது!

எமது அதிகபட்ச வேலைக் கூலி

| | |
|---|---|
| TATA | 44,000/- |
| LEYLAND | 47,000/- |
| Hino | 46,000/- |
| C | 52,000/- |

நாட்டிலேயே அதிகுறைந்த வேலைக் கூலி

SMEPLUS speedloan

பிரதிபலன்களை பெறத்தக்கவர்கள்

உற்பத்தியாளர்களான உங்களை கரை சேர்க்கும் வழி

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 011 5 411 411

தேவைக்கு ஏற்ப அதிகூடிய கடன் தொகை
ஆகக் குறைந்த ஆவணங்களுடனான துரித கடன் சேவை
வெற்றிகரமான வாழ்க்கைப் பயணத்திற்கான ஆலோசனை வழிகாட்டல்கள்.
கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏதுவானது.
5% இலிருந்தான மிகக் குறைந்த வட்டி வீதத்தின் அடிப்படையிலான தவணைக் கொடுப்பனவு முறை.

SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

அபான்ஸ் எலைட் காட்சியறைகள் இரவு 9 மணி வரை திறந்திருக்கும்

சாதனையாளர்களின் மதிநுட்பமான தெரிவு

4 YEAR WARRANTY
0% INTEREST

அங்கொன்றும், இங்கொன்றுமாய் பொருத்தப்பட்ட பல கணினிகள் சந்தையில் இருந்தாலும் உலகத்தரம் வாய்ந்த கணினியொன்றை பெறுவதற்கு சிறந்த இடம் அபான்ஸ் மாத்திரமே

Lenovo
Windows 10
LENOVO IDEAPAD 100

LENOVO IP 100 CEL - INTEL CEL DC Processor - 2GB RAM - 500GB Hard Disk - 15.6" Display - Windows 10 - ரூ.51,900 - விசேட விலை ரூ.44,900

LENOVO IP 100 PQC - INTEL PQC Processor - 4GB RAM - 500GB Hard Disk - 15.6" Display - DOS - ரூ.55,900 - விசேட விலை ரூ.49,900

LENOVO IP 100 i3 - i3 5th Generation - 4GB RAM - 500GB Hard Disk - 15.6" Display - DOS - ரூ.68,500 - மாதாந்தம் 5,750

LENOVO IP 100 i3 VGA - i3 5th Generation - 4GB RAM - 500GB Hard Disk - DOS - 2GB VGA - 1 Year Warranty - ரூ.72,900 - மாதாந்தம் 6,117

DELL 5558 i7 - i7-5500U 5th Generation - 8GB RAM - 1TB Hard Disk - 4GB Nvidia - 15.6" Display - ரூ.138,990 - விசேட விலை ரூ.122,990

DELL 5558 i5 - i5-5200U 5th Generation - 4GB RAM - 1TB Hard Disk - Windows 8.1 - 15.6" Display - ரூ.106,990 - விசேட விலை ரூ.95,990

DELL 3543 i3 - i3-5005U 5th Generation - 4GB RAM - 500GB Hard Disk - 15.6" Display - ரூ.81,990 - விசேட விலை ரூ.71,990

LENOVO G 50 i5 - i5 5200 5th Generation - 4GB RAM - 1TB Hard Disk - DOS - ரூ.84,900 - மாதாந்தம் 7,117

LENOVO G 50 i5 VGA - i5 5200U 5th Generation - 4GB RAM - 1TB Hard Disk - DOS - 2GB GFX NVIDIA - ரூ.92,900 - மாதாந்தம் 7,784

LENOVO G 50 i7 - i7 5500U 5th Generation - 8GB RAM - 1TB Hard Disk - DOS - 2GB VGA - ரூ.115,900 - மாதாந்தம் 9,700

HP 15 - R263 DC - Intel Cel Dual Core 2840 - 4GB RAM - 500GB Hard Disk - 15.6" Display - ரூ.50,900 - மாதாந்தம் 4,291

HP 15R260 BING - Intel Cel Dual Core 2840 - 2GB RAM - 500GB HDD - 15.6" Display - Windows 8.1 upgradable to Win 10 - ரூ.53,990 - மாதாந்தம் 5,166

HP 15 AC i3 - i3-5010 - 5th Generation - 4GB RAM - 500GB Hard Disk - 15.6" Display - ரூ.71,500 - மாதாந்தம் 6,000

HP 15-R285 - Intel Core i3-5010U - 5th Generation - Windows 8.1 - 4GB RAM, 500GB HDD - 15.6" Diagonal HD BrightView - WLED-backlit Display - ரூ.77,500 - மாதாந்தம் 6,500

HP 15 AC i5 - i5-5200 - 5th Generation - 4GB RAM - 1TB Hard Disk - 15.6" Display - ரூ.91,900 - மாதாந்தம் 7,700

HP 15-R286 - Intel Core i5-5200U - 5th Generation - Windows 8.1 - 4GB RAM, 1TB HDD - 15.6" Diagonal HD BrightView - WLED-backlit Display - ரூ.96,900 - மாதாந்தம் 8,117

FREE VIRUS GUARD

acer explore beyond limits

E51-531-DC - INTEL Dual Core CEL N3050 DC - 4GB RAM - 500GB Hard Disk - 15.6" Display - ரூ.47,990 - மாதாந்தம் 3,599

E5-573-i3 - i3-5015 5th Generation - 4GB RAM - 1TB Hard Disk - 15.6" Display - ரூ.68,990 - மாதாந்தம் 5,199

E5-573-i5 - i5-5200 5th Generation - 4GB RAM - 1TB Hard Disk - 15.6" Display - Windows 8.1 - விசேட விலை ரூ.91,990 - மாதாந்தம் 6,799

E5-573-i7 - i7-5500 5th Generation - 8GB RAM - 1TB Hard Disk - 15.6" Display - 2GB VGA - விசேட விலை ரூ.114,990 - மாதாந்தம் 8,599

IT HOTLINE 5886655
Abans


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ... 2015 டிசம்பர் 15 ஆம் திகதி வெளியிடப்பட்டது.